

தனி பிரதி ரூ. 5/–
ஆண்டு சந்தா ரூ. 60/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

மலர் : 8 இதழ் : 4 பிப்ரவரி – 2012

## உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

சங்கீதம் 91:11

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்



## சுதேச ஊழியர் சாட்சி

# Rev. கண்ணு பாபோர்

## தாவடியா, குஜராத்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் கண்ணு பாபோர். குஜராத் மாநிலத்திலுள்ள ஜாலோத் தாலுகாவைச் சேர்ந்த தாவடியா என்ற கிராமத்தைச் சேர்ந்தவன். சாராயம் குடித்தல், பீடி, தம்பாக்கு போடுதல், விபச்சாரம், அடிதடி சண்டை போன்ற அனைத்து விதமான பாவங்களையும் செய்து வந்தேன். எங்கள் பகுதியில் திருமணம் செய்ய வேண்டுமென்றால் பெண் வீட்டாருக்கு மாப்பிள்ளை வீட்டில் இருந்து அதிகளவில் பணம் நகை கொடுக்க வேண்டும். நாங்களோ மிகவும் கஷ்டமான நிலையில் இருந்தபடியால், நான் பக்கத்துக் கிராமத்திற்குச் சென்று வீட்டில் வேறு ஆள் இல்லாமல் தனியாக இருந்த ஒரு பெண்ணை நீ என்னுடன் வந்துவிடு அல்லது உன்னையும் வீட்டையும் கொளுத்திவிடுவேன் என்று மிரட்டி அவளை அழைத்து வந்து திருமணம் செய்தேன்.


நான் பிசாசுகளின் பிடியினால் பாதிக்கப்பட்டு, மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். இந்த பிரச்சினையில் இருந்து விடுதலை பெற மந்திரவாதிகளை நாடினேன். அவர்கள் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்துவிட்டு, உனக்குள் 1 கோடி பிசாசுகள் உள்ளன. இவைகள் நீ மந்திரவாதியாக மாறி மந்திரக் கிரியைகள் செய்தால்தான் ஓடும் என்று கூறிவிட்டனர். அதை நம்பி நான் ஆடு, கோழிகளின் இரத்தத்தைக் குடித்தேன், ஆனாலும் பலனில்லை.

இப்படியிருக்க எனது மாமா தனக்கு சுகம் கொடுத்த இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் தனது சாட்சியையும் கூறி என்னையும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்படி கூறினார். நான் அவர் கூறியதை மதிக்காமல் விட்டுவிட்டேன். ஒரு நாள் வீட்டில் யாருமில்லாத நேரத்தில் எனது மாமாவின் வேதாகமத்தை எடுத்து வாசித்தேன். அதின் முதல் பக்கத்திலுள்ள சிருஷ்டிப்பினைக் குறித்த காரியத்தை வாசித்தபின் உலகத்தை படைத்த உன்னத தேவன் இயேசு கிறிஸ்துதான் என்று உணர்ந்து தினமும் படிக்க ஆரம்பித்தேன். அதன்பின் ஆலயத்திற்குச் சென்றேன், ஞானஸ்நானம் பெற்றேன். என்னைப் பிடித்திருந்த பிசாசுகள் ஓடின. எனது வாழ்க்கையை முற்றிலுமாக தேவன் மாற்றினார்.

தற்போது B.Th., படித்து முடித்து 2009ம் ஆண்டு ஷாலோம் போதகராக அபிஷேகம் செய்யப்பட்டு, தற்போது மல்வாசி என்ற கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன். சுமார் 30க்கும் அதிகமான குடும்பத்தார் தேவனை ஆராதனை செய்து வருகின்றனர். மேலும் வாங்கோல் என்ற பகுதியில் எனது மூலமாக 4 சபைகளை ஸ்தாபிக்கவும், ஊழியர்களை எழுப்பவும், 200க்கும் அதிகமான குடும்பத்தாரை தேவனண்டை நடத்தவும் தேவன் கிருபை செய்துள்ளார். தொடர்ந்து எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் நாங்கள் செய்து வருகின்ற ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Jesus Redeems,** Nalumavadi.

## உங்கள் சகோதரனிடமிருந்து....



***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***

ஆண்டவரும் இரட்சகராகிய இயேசுவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பு வாழ்த்துக்கள்.

புதிய வருடத்தில் ஜனவரி மாதத்தை சீக்கிரமாக கடந்து செல்லும்படியாக தேவன் கிருபை தந்தார். புதிய ஆண்டில் ஜனவரி 1ம் தேதி அன்று தூத்துக்குடி WME சபையில் குடும்பமாக பங்குபெறவும், புத்தாண்டு வாக்குதத்தசெய்தி கொடுக்க தேவன் கிருபை தந்தார். மேலும் நாலுமாவடியில் தேவனுடைய கூடாரத்தில் நடைபெற்ற இயேசு விடுவிக்கிறார் புத்தாண்டு வாக்குத்தத்த ஆசீர்வாதக் கூட்டத்தில் பங்குபெறவும், **சகோ. மோகன் சி லாசரஸ்** மற்றும் இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காக ஜெபிக்கவும் தேவன் கிருபை தந்தார். ஜனவரி 2ம் தேதி திங்கட்கிழமை தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் தேவ ஊழியர்களுடன் புத்தாண்டு சிறப்பு கூடுகையில் பங்குபெற்று வாக்குத்தத்தச் செய்தியளித்து ஜெபிக்க தேவன் கிருபை தந்தார்.

பணித்தளத்தில் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் 5,7,9 தேதிகளில் ஊழியர்களின் குடும்பங்களுக்கு **புத்தாண்டு கூடுகைகளையும்**, மற்றும் 11, 12 தேதிகளில் குஜராத்தில் அனைத்து **சபை மூப்பர்களுக்கான சிறப்பு புதுவருட ஆசீர்வாதக் கூடுகைளையும்** நடத்த தேவன் கிருபை தந்தார். என் மனைவி **வஹிதாவும்** சுதேச ஊழியர் மனைவிமார்களுக்கான **சிறப்பு புத்தாண்டு கூடுகைகளை** 16,17,18,19 தேதிகளில் நடத்த தேவன் கிருபை தந்தார். மெய்யாகவே தேவனுடைய அபிஷேகத்தின் வல்லமை இறங்கி வந்தது. புதிய தரிசனம், புதிய கிருபைகளை யாவரும் பெற்று இவ்வருட எழுப்புதலுக்கு ஆயத்தமானார்கள்.

ஜனவரி 14ம் தேதி நாக்பூரில் **VISION INDIA** ஸ்தாபனத்தின் மூலமாக, CNI மற்றும் அனைத்து பெந்தேகோஸ்தே சபை ஊழியர்கள் மூலமாக **1200 வாலிப ஆண்கள்** & **பெண்களுக்கு** சிறப்பு முகாம் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் சிறப்பு செய்திகளை பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை தந்தார். நூற்றுக்கணக்கான வாலிபர்கள் கண்ணீருடன் தங்களை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்தார்கள். இறுதி செய்தி வேளையில் பரிசுத்த ஆவியானவரின் நிரப்புதலுடன் அநேகர் தங்களை அர்ப்பணித்தார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

அதை தொடர்ந்து மாலை 6 மணி அளவில் நாக்பூர் பெந்தேகோஸ்தே போதகர் ஐக்கியக் கூடுகையில் சுமார் 100 போதகர் குடும்பங்களுக்கு செய்தியளிக்க கிருபை தந்தார். தரிசனப்பணியில் இன்னும் விரிவடைய தேசத்தை தேவனுக்கு சொந்தமாக்க விசுவாசத்துடன் சபை ஊழியர்கள் அர்ப்பணித்தார்கள். 15.01.2012 ஞாயிற்றுக்கிழமை நாக்பூர் New Convenant Church-ல் **"கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்"** வாக்குத்தத்த செய்தியளிக்க தேவன் கிருபை தந்தார்.

அதே 14.01.2012 சனிக்கிழமை அன்று சென்னை **Madras Christian College Hr. Sec. School** சார்பாக கட்டப்பட்ட **குந்திகேடா** (குஜராத்) ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய **திரு. மனோகர்** (தலைமையாசிரியர்) தலைமையில் 9 ஆசிரியர்கள் குழுவாக வந்து பிரதிஷ்டை செய்தார்கள். மேலும் இராஜஸ்தானில் உள்ள பிஜல்பூர் ஷாலோம் பள்ளி மற்றும் விடுதியை பார்வையிட்டு தேவ செய்தி கொடுத்து உற்சாகப்படுத்தினார்கள். இதை ஒருங்கிணைத்து செய்த ஷாலோம் பிரதிநிதி **திரு. டக்லஸ்** (ஆசிரியர்) அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன்.

மேலும் பணித்தளத்தில் ஜனவரி 21,23,24 தேதிகளில் மூன்று ராஜ்ஜியங்களில் உள்ள அனைத்து **ஞாயிறுபள்ளி ஆசிரியர்களுக்கான சிறப்புப் பயிற்சி** மற்றும் ஆசீர்வாத கூடுகை நடைபெற தேவன் கிருபை தந்தார். அதுபோல் இந்த பத்திரிகை உங்கள் கரங்களில் இருக்கும்போது ஜனவரி 24,25,26,27 தேதிகளில் மத்தியபிரதேச **ஷாலோம் சபை மூப்பர்கள்** கூடுகை 4 இடங்களில் சுமார் 150 சபைகளில் உள்ள 1000 மூப்பர்களுக்கு நடைபெற்று கொண்டிருக்கும்.

தொடர்ந்து பிப்ரவரி மாத ஊழியங்களுக்காக பாரத்துடன் ஜெபியுங்கள். தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்கள், முன்னேற்றப் பணி ஊழியர்கள், குஜராத் பணித்தள அலுவலக ஊழியர்கள், சபைகள் மற்றும் Project-களுக்காக ஜெபியுங்கள். குறிப்பாக எனக்காக, என் மனைவி வஹிதா மற்றும் பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினாவுக்காக ஜெபியுங்கள். நாங்களும் குடும்பமாக உங்கள் அனைவருக்காகவும் ஜெபித்து வருகிறோம்.

**"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலின் குடும்பத்துக்கும், யூதாவின் குடும்பத்துக்கும் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன்"** எரேமியா33:14 என்ற வசனத்தின்படி உங்களுக்கு தேவன் தந்த நல்வாக்குகளை நிறைவேற்றுவாராக!

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள
09377445468

## அவசர தேவைக்கான சிறப்பு ஜெப வேண்டுகோள்

மத்தியபிரதேசத்தில் ஜாபூவா மாவட்டத்தில் அந்தர்வேலியா கிராமத்தில் ஷாலோம் சபை மூலமாக Compassion East India உதவியுடன் சுமார் 300 ஆதிவாசி பிள்ளைகள் அந்தர்வேலியா கிராமத்தில் தாங்கப்பட்டு நல்ல கல்வி அறிவும், வேத அறிவும் பெற்று வருகிறார்கள். முழு கிராமமே ஆண்டவரால் நடத்தப்பட்டு வருகிறார்கள்.

மாணவர்களின் Tuition Centre-க்காக 6 அறைகள் கொண்ட Hall உடனடியாக Project-க்காக கட்டப்பட வேண்டியதுள்ளது. வேலைகளை ஆரம்பித்து உள்ளோம். இந்த Tuition Shed சிறிய அளவில் அமைப்பதற்கு உடனடியாக **ரூ.2.5 இலட்சங்கள்** தேவைப்படுகிறது. தேவன் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு சிறு உதவியாவது செய்ய அன்புடன் வேண்டுகிறோம்.

***தேவன் தாமே உங்களை பல மடங்கு ஆசீர்வதிப்பாராக!***

# தூதர்களுக்கு கட்டளையிடும் ஆண்டவர்

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார்." (சங் 91:11)**

## வாழ்க்கைப்பாதையில் வழி நடத்தும் தேவ தூதர்கள்

**"யாக்கோபு பிரயாணம்பண்ணுகையில் தேவதூதர்கள் அவனைச் சந்தித்தார்கள்." (ஆதி 32:1)** வேதத்தில் யாக்கோபின் வாழ்க்கையைத் தியானித்து பாருங்கள். யாக்கோபு தன் வாழ்க்கையில் அநேக பிரச்சனைகளை மேற்கொண்டவன். அநேக போராட்டங்களை சந்தித்தவன். தன் தவறுகளின் நிமித்தம், தன் சமாதானத்தை இழந்து தனிமை உணர்வால் பாதிக்கப்பட்டவன். ஆனாலும் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர் யாக்கோபின் தேவனுமாக இருந்து அவனை ஆசீர்வதித்தார். தனிமையான வேலைகளிலும், போராட்ட நேரங்களிலும் தேவ தூதனை அவனுக்காக அனுப்பி பெலப்படுத்தினார். ஆதியாகமம் 28ம் அதிகாரத்தில் பெயர்செபாவை விட்டு புறப்பட்டு ஆரானுக்கு செல்லும் வழியில் தனிமையாக சூரியன் அஸ்தமித்த வேளையில் ராத்தங்கினான். அப்போது சொப்பனத்தில் தேவ தூதர்கள் ஏறுவதையும், இறங்குவதையும் கண்டு, தேவ சத்தத்தையும் கேட்டான். அதுபோலவே ஆதியாகமம் 32ம் அதிகாரத்தில் யாக்கோபு பிரயாணம் பண்ணுகையில், தேவ தூதர்களை ஆண்டவர் அனுப்பினார். யாக்கோபு சோர்ந்து போகாமல், வாக்குத்தத்தங்களை சுதந்தரித்து கொண்டு பூமியின் வம்சங்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கும்படி தேவன் தாமே, தேவ தூதர்களை அனுப்பி கொண்டிருந்தார்.

எனக்கு அன்பான தேவ ஜனமே, தேவன் இன்று நமக்கும் வாழ்க்கைப் பாதையில் சோர்ந்து போகும்போதும், தனிமையாக தவிக்கும் போதும், அந்தகாரங்கள் நம்மை சூழும்போதும் தேவன் நமக்காக தேவ தூதர்களை கட்டாயம் அனுப்புவார். அடிமைப்பெண் ஆகார் தன் பிள்ளை சாவதைக் காணக்கூடாதபடி வனாந்தர பாதையில் தவித்தபோது, பிள்ளையின் அழுகுரலைக் கேட்டு தேவ தூதரை அனுப்பி துரவைக் காட்டிய தேவன், தம்முடைய பிள்ளைகளாகிய நமக்கும் தேவைகளை சந்திக்க தேவ தூதனை அனுப்புவார்.

## ஊழியப் பாதையில் வழிநடத்த அனுப்பப்படும் தேவதூதர்கள்

இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் 400 வருட அடிமைத்தனத்திலிருந்து மீட்புப் பணிக்காக தேவன் மோசேயை தெரிந்து கொண்டு, எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்கு கொண்டு செல்வதற்கு மோசேயை தலைவனாக ஏற்படுத்தி நடத்திச் சென்றாலும், யாத்திராகமம் 23:20ல் வாசிக்கிறபடி ''வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்''

ஊழியம் செய்யும்படியாக தேவன் நம்மை அழைக்கும்போது ஊழியப் பொறுப்புகளை தேவன் தரும்போது ஊழியப் பாதையில் நம்மை காப்பாற்றுவதற்காக தேவ தூதர்களை கட்டளையிடுகிறார். நமக்கு தேவன் வைத்திருக்கும் ஊழியங்களை நிறைவேற்றும்வரை அவர்கள் நமக்கு முன்பாக செல்வார்கள். மட்டுமல்ல நமக்கு எதிராக நிற்கும் சகல போராட்டங்கள், சத்துருவின் எதிர்ப்புகள் அனைத்தையும் அதமாக்குவார்கள். "என் தூதனானவர் உனக்குமுன்சென்று, எமோரியரும் ஏத்தியரும் பெரிசியரும் கானானியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடத்துக்கு உன்னை நடத்திக்கொண்டுபோவார்; அவர்களை நான் அதம் பண்ணவேன்" . யாத்திரகமம் 23:23

நானும் என் மனைவி **வஹிதாவும்** திருமணமான முதல் வாரத்தில் பீல் மக்களை தரிசனமாக தேவன் காட்டினார். பின்பு 40வது நாள் வில், அம்புகள் வைத்து சண்டையிட்டும், குடித்து வெறித்து அலைந்து, மந்திரபூஜைகளை செய்து பில்லிசூனியத்தால் கட்டப்பட்ட பீல்மக்கள் குடிகாரர், கொள்ளைக்காரர், பில்லிசூனியங்களை செய்யும் மனிதர்கள் மத்தியில் நாங்கள் அடியெடுத்து வைப்பதற்கு முன்பாகவே தேவன் தூதர்களை அனுப்பினார். சுவிசேஷ வாசல்களை திறந்தார். 20 வருடங்களில் எத்தனையோ பிரச்சினைகள், போராட்டங்கள், நாச மோசங்கள் நெருங்கினபோதும் தேவன் தேவதூதர்களை அனுப்பி ஊழியங்களை வெற்றி சிறக்க வைத்துள்ளார். எதிராக வந்த போராட்டங்களை அதமாக்கினார். எத்தனையோ நற்செய்தி கூட்டங்கள், சுதேச ஊழியர் கூடுகைகள், வாலிபர் முகாம்கள், சிறுவர் முகாம்கள் என ஒவ்வொரு காரியங்களையும் நடத்தும்போது தேவதூதர்களை தேவன் அனுப்பியுள்ளதையும், அவர்கள் தாங்கி சுமப்பதையும் அறிந்துள்ளோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

தேவ ஊழியங்களை நடத்துகிற அன்பு சகோதர, சகோதரிகளே, ஊழியப்பாதையில் சோர்ந்து போக வேண்டோம். தேவன் உங்களை சரியான பாதையில் நடத்தி செல்ல தம் தேவதூதர்களை கட்டாயம் அனுப்புவார்.

## கர்ப்பத்தின் கனிகளை பாதுகாக்கும் தேவதூதர்கள்

"அவர்கள் போனபின்பு, கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான்". (மத்தேயு 2:13)

இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிறந்தபோது பிசாசானவன் இயேசு பாலகனை அழிப்பதற்காக ஏரோது ராஜாவின் மூலமாக எத்தனையோ பாலகர்களை அழிப்பதை நாம் வாசிக்கிறோம். பிதாவாகிய தேவன் தேவதூதனை அனுப்பி இயேசுபாலகனை ஏரோதின் வஞ்சக ஆலோசனைக்கு தப்பி காத்துக் கொள்வதை பார்க்கிறோம். தேவதூதர்கள் யோசேப்பிற்கு எச்சரிப்பின் ஆலோசனைகளை தந்து நடத்தி சென்றார்கள். பழைய ஏற்பாட்டில் பார்வோன் உள்ளத்தில் பிசாசானவன் ஒரு யோசனையைக் கொடுத்து பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியில் போட்டு அழித்து விட கட்டளையிட்டான். ஏன் தெரியுமா? தேவனுக்கு நன்றாக தெரியும். மோசே என்ற பாலகன் பிறக்கப்போகிறான். அவன் இஸ்ரவேலை ரட்சிக்கும்படியாக

உருவாக்கப்படுகிறவன் என அறிந்தபடியால் ஆண் குழந்தைகளை அழிக்கும் வெறியுடன் செயல்பட்டான். ஆனால் ஆண்டவரோ மோசேயின் பெற்றோருக்கு ஆலோசனை தந்து பிசாசை வெட்கப்படுத்தி பார்வோன் ராணியே வளர்க்கும்படி திட்டத்தை நிறைவேற்றினார்.

எனக்கன்பானவர்களே, தேவன் தம் ஜனங்களின் சந்ததியை காக்கும்படி, அதாவது நம் கர்ப்பத்தின் கனிகளை காக்கும்படி தேவதூதர்களை கட்டளையிடுகிறார். நாம் பிள்ளைகளுக்காக ஜெபிக்கும்போது கட்டாயமாக தேவதூதர்களுக்கு அவர் கட்டளை கொடுத்து, பிள்ளைகளின் போக்கிலும், வரத்திலும், உறங்கும்போதும், இருக்கிற இடங்களிலெல்லாம் நம் பிள்ளைகளுக்கு நியமிக்கப்பட்ட தேவதூதர்களை அனுப்புகிறார். தேவன் எங்களுக்கு டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா மூன்று பிள்ளைகளை கிருபையாய் தந்துள்ளார்.

ஊழியப் பாதையில் ஆரம்ப நாட்களில் பிசாசு பிடித்தவர்கள், மந்திரவாதி குடும்பத்தார் ஜெபிக்க வருவார்கள். பிசாசானவன் கடும் கோபத்துடன் வெளியேறி செல்வான். எங்கள் பிள்ளைகள் சிறு பிள்ளைகளாக இருக்கும்போது கூட, கிராமங்களுக்கு பிள்ளைகளுடன் செல்வோம். தேவன் ஒரு பொல்லாப்பும் பிள்ளைகளை தொடாதபடி பாதுகாத்தார். அதுபோல் முதல் வகுப்பிலிருந்து கல்லூரி படிப்பினை முடிக்கும் வரைக்கும் நியமிக்கப்பட்ட தூதர்களை அனுப்பி காத்து பராமரித்து வளர்த்து தந்தார்.

இதை வாசிக்கும் அன்பானவர்களே, உங்கள் கர்ப்பத்தின் கனிகளை பற்றி கவலையே படவேண்டாம். ஜெபித்து அர்ப்பணியுங்கள், தேவதூதர்களை அவர் கட்டளையிட்டு பிள்ளைகளை வழிநடத்துவார்.

## தேவனுக்கு ஊழியம் செய்பவர்களை பெலப்படுத்தும் தேவதூதர்கள்

தேவனுக்காக நாம் ஊழியம் செய்யும்போது, ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக, சபைகளுக்காக ஜெபிக்கும்போது, தியாகத்துடன் தாங்கும்போது தேவன் தம்முடைய தூதர்களை அனுப்பி நம்மைப் பெலப்படுத்துகிறார். உன்னதமான அனுபவங்களுக்கு நடத்தி செல்கிறார்.

1இராஜாக்கள் 19:5ஐ வாசித்து பாருங்கள். “ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான்; அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு என்றான்”. தேவனுடைய ஊழியக்காரனாகிய தீர்க்கதரிசியான எலியா எதிர்ப்புகளை கண்டு மனம் உடைந்து பிதாக்களைப் பார்க்கிலும் நான் நல்லவன் அல்ல, என்னை எடுத்துக்கொள்ளும் என்று சொல்லுகிறான். ஆனால் தேவனோ அவனை பயன்படுத்தி இன்னும் இராஜாக்களை அபிஷேகம் பண்ணவும், எலிசா தீர்க்கதரிசியை உருவாக்கவும் சித்தம் கொண்டபடியால், எலியாவுக்காக தேவதூதனை அனுப்புகிறார், போஜனம் செய்ய வைக்கிறார், தட்டி எழுப்புகிறார், ஒரேப் பர்வதம் மட்டும் கடந்து வர பலப்படுத்துகிறார்.

அதுபோலவே 2 இராஜாக்கள் 1:3,15 வசனங்களை வாசியுங்கள். இராஜாக்களுக்கு முன்பாக நிற்கும்படியாக எலியாவிற்கு தைரியத்தை தேவதூதர்கள் கட்டளையிடுகிறார்கள். இறுதியில் ஊழியங்களை நிறைவேற்றி உன்னதமான அனுபவங்களுடன் பரலோகத்திற்கு எடுத்து கொள்ளபடுகிறார்.

அதுபோல புதிய ஏற்பாட்டிலும் அப்போஸ்தலன் யோவானை கவனித்துப் பாருங்கள். 3 1/2 வருடங்கள் கிறிஸ்துவுடன் ஊழியம் செய்தார். இயேசுவுக்கு அன்பான சீஷனாக, மார்பில் சாய்ந்தவனாக வாழ்ந்து ஊழியம் செய்தார். அப்போஸ்தல ஊழியத்தை எருசலேமில் நிறைவேற்றினார். ஆனால் அவர் இப்போது பத்மு தீவில் கடத்தப்பட்டார். மிகவும் தனிமையாக ஒடுக்கப்பட்ட சூழ்நிலை. தேவன் அவரை தனியாக விட்டுவிடவில்லை. "சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்". வெளி. 1:1 இதில் தேவதூதனை அனுப்பி பரலோக தரிசனங்களை தந்து வெளிப்படுத்தின விசேஷத்தின் உன்னத அனுபவமாக கொடுத்து திருச்சபைக்கு ஆசீர்வாதமாக, வேதபுத்தகத்தின் நிறைவாக தந்தார்.

எனக்கன்பானவர்களே, நீங்கள் தேவனுக்கு ஊழியம் செய்து கொண்டிருக்கலாம், தேவனுக்காக ஏதாவது செய்து கொண்டிருக்கலாம், ஒருவேளை ஊழியப்பாதையில் சோர்ந்துவிட்டீர்களா? கைவிடப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறீர்களா? தனிமையாக இருப்பதைப் போல் உணர்கிறீர்களா? உங்களை அழைத்த தேவன் உங்களை கைவிடமாட்டார். எலியாவை பெலப்படுத்தி உன்னத அனுபவங்களுடன் ஊழியத்தை நிறைவேற்ற கிருபைசெய்தார். அப்போஸ்தலன் யோவான் தனிமையாக விடப்பட்டபோது தூதனை அனுப்பி உன்னத அனுபவங்களை தந்த தேவன் உங்களுக்கும் கட்டாயம் அப்படியே செய்வார். தேவன் உங்களை மேன்மையாக வைப்பார்.

---


# ஜெபிக்க வேண்டுகிறோம்...



- குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் வசிக்கும் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி ஜனங்கள் அனைவரும், நமது தலைமுறையில் இரட்சிக்கப்பட்டு தேவனண்டையில் திரும்ப ஜெபியுங்கள்.
- **Rt. Rev. Dr. V. Devadass, Sis. Vahitha Devadass** மற்றும் பிள்ளைகள் **Gladson Titus, Brighton Shalom, Joy Shekinah** **(Doing M.B.B.S.,)** இவர்களுக்காக ஜெபியுங்கள்.
- இந்த ஆண்டில் பணித்தளங்களில் (3 மாநிலங்களிலும்) சுமார் 100 தேவனுடைய ஆலயங்கள் கட்டப்பட வேண்டியுள்ளன. இந்த ஆலயங்களை கட்டிமுடிக்க தேவன் நல்ல சூழ்நிலைகளைத் தரவும், தேவைகளை சந்திக்கவும், நல்ல பாதுகாவலை தரவும் ஜெபியுங்கள்.
- தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும், குஜராத் பணித்தள அலுவலக ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

## 23.02.2012 Auß ©\kRSôs LôÔm

# பேராயர் தேவதாஸ் அவர்கள்



**நாள உன்னைத் தாயின் வயிற்றில் உருவாககு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்”.** எரேமியா 1:5

தேவகிருபையால் வரும் 23.02.2012 அன்று அடியேனை **52 வருடங்களை** காணச் செய்த அவர் அன்பிற்காக, கிருபைக்காக தேவனைத் துதிக்கிறேன். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தும் கிறிஸ்துவை விட்டு தூரமாக அலைந்த நான் அன்பும், சமாதானமும் கிடைக்கப் பெறாமல் உயிரை மாய்த்துக் கொள்ள 1978ஆம் ஆண்டில் துணிந்த போது தேவன் கிருபையாய் ஜீவனைத் தந்தார். 14.10.1979 அன்று ஆண்டவர் என்னை ரட்சித்து 04.11.1979 அன்று பரிசுத்த ஆவியால் நிரப்பி பேர் சொல்லி அழைத்து, ஒரு ஜாதி மக்களுக்கு உன்னை ஆசீர்வாதமாக வைப்பேன் என திருவுளம்பற்றினார்.

தேவ தீர்மானத்தின்படி 1982 ஜனவரி முதல் முழுநேர மிஷனெரிப் பணிக்காக FMPB மூலமாக பீஹார் மாநிலத்தில் ஊழியம் செய்ய தேவன் கிருபை செய்தார். 1985ம் ஆண்டு IMS-ல் மிஷனெரியாக இருந்த சகோதரி வஹிதாவை ஏற்ற துணையாக தந்து திருமணமான நான்காவது நாளில் ஜெபிக்கும்போது பீல் மக்கள் தரிசனம் தந்து IMS மூலமாக பீல் மக்கள் மத்தியில் 5 ஆண்டுகள் பணிபுரியவும், சபைகளை ஸ்தாபிக்கவும் ஆயிரத்துக்கும் அதிகமான ஆத்துமாக்களை வழி நடத்தவும் கிருபைதந்தார். பின்பு தேவன் தந்த பரம தரிசனத்தின்படி 1991ம் ஆண்டு குஜராத் ஜாலோத் பணித்தளத்தில் ஷாலோம் ஊழியத்தை அற்பமாக ஆரம்பிக்க தேவன் கிருபை தந்தார். இன்று 20 ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான ஆத்துமாக்களையும், பல நூறு சபைகளையும், பல நூறு பீல் சுதேச ஊழியர்களையும் தேவன் தந்து ஆசீர்வாதமாக வைத்துள்ளார்.

மேலும் தேவன் தந்த என் மனைவி வஹிதாவிற்கும், என் அன்பு பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினாவிற்காகவும் தேவனை துதிக்கிறேன். மேலாக எங்கள் குடும்பத்தையும், தேவன் தந்த பீல் ஆதிவாசி மக்களை நேசித்து, ஜெபித்து தாங்கும் உங்கள் யாவருக்காகவும் தேவனை துதிக்கிறேன். தொடர்ந்து இந்த புதிய ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் தேவனுக்காக பெரிய காரியங்களை செய்ய அடியேனை அர்ப்பணிக்கிறேன். எனக்காக, என் குடும்பத்துக்காக தேவன் தந்த பீல் மக்கள் தரிசனப் பணிக்காக அனுதினமும் ஜெபியுங்கள். குறிப்பாக 23.02.2012 அன்று ஜெபித்து தாங்க அன்புடன் கேட்கிறேன்.

**“உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்”.** ஆதியாகமம் 12:3 என்ற வசனத்தின்படி உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

# 2012ம் வருட சிறப்பு ஊழிய திட்டங்கள்

## 500 புதிய சுதேச ஊழியர்கள்

தேவகிருபையால் 20 வருட ஊழியப்பாதையில் தேவன் நமக்கு சுமார் 500 பீல் சுதேச ஊழியர்களை தந்துள்ளார். இவர்கள் மூலமாக 650 சபைகளையும், 1300 கிராமங்களில் விசுவாசிகளையும் எழும்பி உள்ளனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. கர்த்தருக்கு சித்தமானால் இவ்வருடம் அனைத்து ஊழியர்கள் தங்கள் சபைக்கு அருகில் உள்ள கிராமங்களில் குறைந்தது ஒரு கிளை சபையை எழுப்பவும், ஒரு புதிய சுதேச ஊழியரை உருவாக்கவும் அர்ப்பணித்து உள்ளனர். ஆகவே இவ்வருட இறுதிக்குள் 1000 சுதேச ஊழியர்களும், 1000 கிராம சபைகள் உருவாக்கப்பட தேவ ஆலோசனையுடன் பிரயாசப்பட்டு வருகிறோம். எனவே இவ்வருடம் 500 புதிய சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட ஜெபியுங்கள்.

## 5000 சபை மூப்பர்களுக்கான சிறப்பு முகாம்கள்

இதுவரை தேவன் நமக்கு சுமார் 3000–க்கும் அதிகமான மூப்பர்களை பயிற்றுவிக்க கிருபைத் தந்துள்ளார். இவ்வருடம் ஸ்திரமான, ஆத்தும ஆதாய சபைகளை உருவாக்க சுமார் 5000 மூப்பர்களுக்கு சிறப்பு பயிற்சி கொடுக்க திட்டமிட்டுள்ளோம். ஒவ்வொரு சபைகளின் அளவுக்கேற்றபடி 12,10,7,5,3 என மூப்பர்களை தெரிந்தெடுத்து 300,300 பேர்களுக்காய் சுதேச ஊழியர்கள் குடும்பத்துடன் சேர்ந்து 17 இடங்களில் 17 முகாம்கள் நடத்தப்பட வேண்டும். ஒவ்வொரு முகாமிலும் பரிசுத்த வாழ்வு, ஆவியில் நிறைந்த ஜெப வாழ்வு, ஆத்தும ஆதாய பணி, சபை வளர்ச்சிப் பணி மற்றும் கொடுக்கும் ஸ்திர சபைகள் என்ற தலைப்புகளில் செய்திகள் கொடுத்து சீராக உருவாக்கப்படுவார்கள். மூன்று மாநிலங்களில் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களில் நடைபெற உள்ள 17 மூப்பர்கள் அபிஷேக முகாம்களில் கலந்து கொள்ள உள்ள 5000 ஷாலோம் சபை மூப்பர்களை தேவன் பயன்படுத்த ஜெபியுங்கள்.

## 5000 பீல் ஆதிவாசி மாணவர்களுக்கான சிறப்பு முகாம்கள்

கர்த்தருக்குச் சித்தமானால் 2012ம் வருடத்தில் தேவன் வாலிபர்கள் மேல் விசேஷித்த அபிஷேகத்தை ஊற்றி எழுப்புதலை கட்டளையிடவும் சபை வளர்ச்சியில் அவர்களை பயன்படுத்தவும், தமக்கென்று 500 ஊழியர்களை எழுப்பவும் ஆவியானவர் வழி நடத்துகிறார். ஆகவே 3 மாநிலங்களிலும் 300, 300 வாலிப ஆண்கள், பெண்களுக்கான சிறப்பு முகாம்களை 17 பகுதிகளில் 2 நாட்கள் முகாம்களாக நடத்த ஜெபத்துடன் தீர்மானித்துள்ளோம். குறிப்பாக முகாம்களை மே, ஜூன், ஜூலை மாதங்களில் நடத்த உள்ளோம். இதன் மூலம் பீல் மக்கள் சபைகளில் மாபெரும் எழுப்புதல் உண்டாக ஜெபியுங்கள்.

## 100 கிராம ஆலயங்களை கட்டுவோம் வாருங்கள்

''இதோ உனக்கு முன்பாக திறந்த வாசலை வைக்கிறேன். அதை ஒருவனும் பூட்டமாட்டான்'' வெளி. 3:8 என்ற வசனத்தின்படி தேவன் நமக்கு தந்த 600க்கும் அதிகமான சபைகளில் 215

கிராம ஆலயங்கள் கட்ட உதவி செய்தார். குறிப்பாக இவ்வருடம் குறைந்தது 100 கிராம ஆலயங்கள் கட்டப்பட வாசல்களை திறந்துள்ளார். நம் விசுவாசிகள், மூப்பர்கள் 40 x 18 அல்லது 50 x 20 அளவுகளில் ஆலயங்களை கட்ட முன்வருகிறார்கள். குறைந்தது 1 இலட்சம் அல்லது 1.5 இலட்சங்கள் செலவில் சிமெண்ட் கூரைகள் போட்டும், ரூ.2 இலட்ச செலவில் RCC கூரை அமைத்தும் கட்டப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற ஒரு ஆலயத்திற்கு ரூ.50,000 கொடுக்கக்கூடிய 2 அல்லது 3 அல்லது 4 பங்காளர்கள் இல்லையெனில் ரூ.1 இலட்சம், 1.5 இலட்சம், 2 இலட்சங்கள் தரக்கூடிய சிறப்பு ஆதரவாளர்கள் உடனடியாக தேவை.

**1000 புதிய ஆதிவாசி சிறுவர் கல்விபணித் திட்டம் (Shalom Charity Mission)**

தேவகிருபையால் நம் Shalom Charity Mission மூலமாக 667 ஆதிவாசி மாணவர்களுக்கும், Compassion India Project மூலமாக 705 மாணவர்களுக்கும் கல்வி அறிவு பணிக்காக உதவி செய்து வருகிறோம். பரிசுத்த ஆவியால் நம் பிள்ளைகள் நிரப்பப்பட்டு, விசேஷித்த ஞானத்தை பெற்று 10, 12th மற்றும் கல்லூரிகளிலும் படித்து வருகிறார்கள். இவ்வருடம் குறைந்தது 1000 புதிய ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வியறிவு பெற்றுக் கொள்ள உதவி செய்ய தீர்மானித்து செயல்படுகிறோம். உங்கள் குடும்பத்தில் ஒரு நபராக ஒரு ஆதிவாசி மாணவரை தாங்க முன்வாருங்கள். தேவன் உங்கள் குடும்பத்தையும், உங்கள் சந்ததியையும் ஆசீர்வதிப்பார்.

## 2012ம் ஆண்டிற்கான சிறப்பு திட்டங்களை நிறைவேற்ற உங்கள் பங்கு.....

- ❖ மாதம் ரூ. 2,000/– கொடுத்து சுதேச ஊழியர்களை ஜெபித்துத் தாங்கும் **மிஷனெரி ஆதரவாளர்கள் 500 பேர்** தேவை.
- ❖ **5000 மூப்பர்கள், 5000 வாலிபர்களுக்கான** 2 நாட்கள் முகாம்கள் 35 இடங்களில் நடத்தப்பட, 30,000 ஆதிவாசி பிள்ளைகளுக்கான CBC (விடுமுறை வேதாகப் பள்ளி) மற்றும் 500 ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சி நடத்த நிதி உதவி தேவை.
- ❖ மேற்கண்ட பயிற்சிகளை நடத்துவதற்கு **மாதம் ரூ. 500/–** கொடுத்து ஜெபித்து தாங்கும் ஷாலோம் ஊழிய பங்காளர்கள் 1000 பேர்கள் உடனடியாக தேவை
- ❖ **ரூ. 50,000/– ரூ. 1,00,000/– ரூ. 2,00,000/–** நிதி உதவி தந்து ஷாலோம் கிராம ஆலயங்கள் 100 இடங்களில் கட்டி தரக்கூடிய பங்காளர்கள் தேவை
- ❖ மாதம் **ரூ. 500/–** கொடுத்து ஒருஆதிவாசி மாணவரை தாங்கக்கூடிய **1000 ஆதரவாளர்கள்** உடனடியாக தேவை
- ❖ இந்த ஷாலோம் மிஷனெரி ஊழியங்களை அறிமுகப்படுத்தி நிதி சேகரித்து அனுப்பக்கூடிய **100 பிரதிநிதிகள்** அவசரமாக தேவை.

***ஜெபியுங்கள்! தாங்குங்கள்!! ஊழியத்தில் பங்கு பெறுங்கள்!!!***

***“உன் தேவனாகிய கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்”. உபா. 28:1***

# கிறிஸ்மஸ் மேளா - 2011 (இராஜஸ்தான்)

கடந்த 2011 டிசம்பர் மாதம் இராஜஸ்தானிலுள்ள ஷாலோம் சபைகளில் ஆறு பகுதிகளில் கிறிஸ்மஸ் மேளா நடத்தப்பட்டது. இராஜஸ்தானில் உருவாக்கப்பட்ட முதல் ஷாலோம் சபையாகிய கும்புராவில் 21–ம் தேதி நடைபெற்றது. இதில் பீல் விசுவாசிகள் 600 பேர் கூடி நடனமாடி தேவனைத் துதித்து ஆராதித்தார்கள். போதகர் பாதர் பாரிய அவர்கள் ஆராதனை வழிநடத்தினார். போதகர் பதியா கராசியா அவர்கள் தலைமை தாங்கினார். மேலும் ஷாலோம் பணித்தள அலுவலக ஊழியர் சகோ. ஜெயராஜ் அவர்கள் கிறிஸ்மஸ் செய்தியளித்தார்கள்.

23–ம் தேதி டெப்ரி கிராமத்தில் போதகர் பாதர் டோடியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கிறிஸ்மஸ் மேளாவில் 500க்கும் அதிகமான பீல் விசுவாசிகள் கலந்து கொண்டனர். இதில் நமது ஊழியத்தின் இராஜஸ்தான் Co-ordinator சகோ. கேரட் அவர்கள் "அவர் நாமம் அதிசயமானவர்" என்ற தலைப்பில் செய்தியளித்தார்கள். இராஜஸ்தான் சஜன்கட் ஒன்றியத்தலைவர் திரு. சௌலால் டின்டோட் அவர்கள் பங்கேற்று வந்திருந்த மக்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைக் கூறினார்கள். அதோடுகூட கிறிஸ்தவர்களுக்கும், சபைகளுக்கும் தேவையான அனைத்துவித உதவிகளையும் செய்து தருவதாக உறுதியளித்தார்கள். விசுவாசிகள் எல்லாரும் சேர்ந்து அவருக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுத்தார்கள்.

மேலும் இராஜஸ்தானிலுள்ள சூடாத்தா, பொட்டேலியா, பான்டிச்சரோடி, அம்ளிப்பாடா போன்ற கிராமங்களிலும் தனித்தனியாக கிறிஸ்மஸ் மேளா நடத்தப்பட்டது. இதில் அந்த கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவர்கள் பங்கேற்றார்கள். இந்த மேளாவில் விசுவாசிகள் இயேசுவை அறியாத தங்களது உறவினர்களையும், நண்பர்களையும் அழைத்துக் கொண்டு வந்தார்கள். இந்த மேளாவில் அநேகர் முதல் முறையாக இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறிந்து கொண்டார்கள். விதைத்த விதைகள் பலன் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள். மேளாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

---

## ஷாலோம் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற கிறிஸ்மஸ் கீத ஆராதனை

---

23.12.2011 அன்று நமது ஷாலோம் தலைமை அலுவலகத்தில் வைத்து, கிறிஸ்மஸ் கொண்டாட்டம் நடைபெற்றது. இதில் ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்கள் மற்றும் சிறு பிள்ளைகள் கலந்து கொண்டனர். இதில் பிஷப் தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் ஆகியோர் பங்கு பெற்று சிறப்பு செய்தி மற்றும் வாழ்த்துக்களை ஊழியர்களுக்கு வழங்கினார்கள். சிறுவர்களுகான விசேஷித்த ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் மற்றும் பரிசு வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. தேவ நாமம் மகிமைப்பட்டது. தேவனுக்கே மகிமை!

## ஷாலோம் சுதேச ஊழியர் குடும்பத்திற்கான புது வருட ஆசீர்வாதக் கூடுகை – 2012

நமது பீல் ஆதிவாசி ஊழியர் குடும்பத்திற்கான புது வருட ஆசீர்வாதக் கூட்டம் குஜராத், இராஜஸ்தான் & மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சிறப்பாக நடத்த தேவன் கிருபை செய்தார்.

இந்தக் கூடுகைகள் ஜனவரி 5ம் தேதி குஜராத் ஊழியர்கள் குடும்பத்திற்கும், 7ம் தேதி மத்தியப்பிரதேசம் ஊழியர்கள் குடும்பத்திற்கும் தாகோத்திலுள்ள C.N.I. ஹாலில் வைத்து நடைபெற்றது. மேலும் இராஜஸ்தான் ஊழியர்கள் குடும்பத்திற்கு ஜனவரி 9ம் தேதி இராஜஸ்தானிலுள்ள, பிஜல்பூரில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டங்களில் மொத்தம் 460 ஊழியர்களும், ஊழியக்காரிகளும் மிகவும் உற்சாகமாக தேவனைத் பாடி துதித்து, ஆராதித்தார்கள். புது வருட வாக்குத்தத்த பாடலை அனைவரும் உற்சாகமாய் பாடினார்கள்.

சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் 2011ம் ஆண்டு தேவன் செய்த மகத்தான காரியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். கேட்ட அனைவரும் நன்றியுள்ள இருதயத்தோடு தேவனைத் துதித்தார்கள். பேராயர் தேவதாஸ் அவர்கள் புது வருட வாக்குத்தத்தமான "கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்" என்ற வசனத்தை மையமாகக் கொண்டு செய்தியளித்து, அனைவரையும் அபிஷேகத்தில் வழி நடத்தி, ஜெபித்து ஆசீர்வதித்தார்கள். ஊழியர்கள் குடும்பமாக புதிய கிருபைகளையும், புதிய அபிஷேகத்தையும், புதிய ஆசீர்வாதங்களையும் பெற்றனர்.

## ஷாலோம் சபை விசுவாச மூப்பர்களுக்கான புது வருட ஆசீர்வாதக் கூடுகை – 2012

குஜராத்திலுள்ள ஷாலோம் பீல் விசுவாச மூப்பர்களுக்கான விசேஷித்த புதுவருட ஆசீர்வாதக் கூட்டம் நடைபெற்றது. தாகோத் பகுதியிலுள்ள மூப்பர்களுக்கு கடந்த 11.01.2012 அன்றும், ஜாலோத் பகுதியிலுள்ள மூப்பர்களுக்கு 12.01.2012 அன்றும், தாகோத் C.N.I. ஹாலில் வைத்து நடைபெற்றது. சுமார் 400 மூப்பர்கள் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றனர். இந்த கூட்டத்தில் **பேராயர் தேவதாஸ்** அவர்கள் புதுவருட வாக்குத்தத்த செய்தியளித்து, அவர்களை அபிஷேகத்தில் நடத்தினார்கள். 2015க்குள் 10 இலட்சம் ஆத்துமாக்களை ஆண்டவரண்டையில் கொண்டு வர வேண்டும் என்ற பாரத்தையும் பெற்றார்கள்.

இந்த கூட்டத்தில் சீஷத்துவ பயிற்சி பாடங்கள், பீலி, பிலோடி மொழி பாடல்கள், குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழி புதிய ஏற்பாடு ஆகியவை உள்ளடங்கிய Mp3 Player கள் BILD நிறுவனத்தின் மூலமாக வழங்கப்பட்டது. இதை பேராயர் தேவதாஸ் அவர்கள் ஜெபித்து வழங்கினார்கள். இதன் மூலம் படிப்பறிவில்லாத கிராம விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரவும், வேத வசனங்களை அதிகமாக அறியவும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதை வழங்கிய BILD ஸ்தாபனத்திற்கு நன்றி கூறுகின்றோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# சுதேச ஊழியர்களுக்கு சமுதாய மறுரூபப் பயிற்சி (ICT)

*(ஊழியர்களுக்கான சிறப்பு வேதாமக பயிற்சி)*

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் சேவா பாரத் **(Seva Bharath, Secandrabad)** ஸ்தாபனத்தின் மூலமாக இந்த **2012**ம் ஆண்டில் மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் இரண்டு **ICT (Institute of Community Transformation) Project, (ICT - Meghnagar & ICT - Jhabua)** கொடுக்கப்பட்டுள்ளது**.** ICT - Meghnagar -ல் நமது ஷாலோம் போதகர் மத்தூர் புரியா, ICT - Jhabua - ல் போதகர் பால்முனியா அவர்களும் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்**.**




இரண்டு Project **–**களிலும் B.Th., முடித்த நமது ஊழியர்களிலிருந்து **8** ஆசிரியர்களாகவும், ஷாலோம் ஊழியர்கள் **20** பேர் மாணவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு **06.01.2012** அன்று தாகோத் பயிற்சி சென்டரில் வைத்துத் தொடங்கப்பட்டது**.**

இந்த நிகழ்ச்சியில் சேவா பாரத் மத்தியப்பிரதேசம் ஒருங்கிணைப்பாளர் Rev. பால் முனியா, அவர்கள் தலைமைத் தாங்கி நடத்தினார்கள்**.** பேராயர் தேவதாஸ் அவர்கள் ICT - Meghnagar -ஐயும், சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் ICT - Jhabua -வையும் ஜெபித்துத் துவக்கி வைத்தார்கள்**.**



தொடர்ந்து ஒரு மாத பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது**.** இந்தத் திட்டத்தினை தேவன் ஆசீர்வதிக்கவும், இது ஊழியர்களுக்கு ஆசீர்வாதமாக அமையவும், இதன் மூலம் ஊழியத்தில் தேவன் இவர்களை வல்லமையாக பயன்படுத்தவும் ஜெபியுங்கள்**.** Seva Bharath General Director **Dr. J. சிரஞ்சீவி** அவர்களுக்காகவும், சேவா பாரத் நிறுவனத்திற்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்**.**




மேக்நகர் ICT




ஜாபுவா ICT

# தேர்வெழுதும் மாணவர்களுக்கான விஷேசித்த ஜெபம் மற்றும் ஆலோசனை கூடுகை

| நாள் | நேரம் |
|---|---|
| **11.02.2012, சனிக்கிழமை** | **மாலை 5.00 to 7.00** |

*இடம்*

**ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்), வடக்குத் தெரு, மார்த்தாண்டம்



*தேவ செய்தி மற்றும் மாணவர்களுக்கான ஆலோசனை வழங்குபவர்*

**சகோ. J. அற்புதராஜ் மர்காஷிஸ்**

(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர், சாஃடர் மேனிலைப்பள்ளி, திருநெல்வேலி)

***தேர்வெழுதும் மாணவர்களுக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படுவதுடன் சிறப்பு ஆலோசனைகளும் வழங்கப்படும், மாணவர்களுடன் பெற்றோரும் கலந்து கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.***

தொடர்புக்கு

**சகோ. செல்வதுரை,** Cell : 94876-89869,

**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

## ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்களுக்கு புத்தாண்டு வாக்குத்தத்த கூட்டம்

02.01.2012 அன்று நமது தூத்துக்குடி ஷாலோம் தலைமை அலுவலகத்தில் வைத்து ஷாலோம் தலைமை அலுவலக மற்றும் கிளை அலுவலக ஊழியர்களுகான சிறப்பு புத்தாண்டு வாக்குத்தத்த கூட்டம் நடைபெற்றது. இதில் **பிஷப் வே. தேவதாஸ்** அவர்கள் வாக்குத்தத்த செய்தியும், **சகோதரி வஹிதா தேவதாஸ்** பணித்தள செய்தியும் வழங்கினார்கள். **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் ஊழியர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

## சிறப்பு உபவாசக் கூடுகை

கடந்த **30.12.2011** அன்று தூத்துக்குடி, கால்டுவெல் காலனி, C.S.I. கால்டுவெல் நினைவு ஆலயத்தில் உபவாச ஜெபம் நடைபெற்றது. இதில் நமது ஊழியர் **சகோ. ரத்திஸ்** அவர்கள் பாடல் வேளையும், **சகோ. ஆலன் எல்விஸ்** அவர்கள் ஆராதனைவேளையையும், **சகோ. ஜான்சன் ஜெபராஜ்** அவர்கள் ஜெப வேளையையும் பொறுப்பெடுத்து நடத்தினார்கள். நமது **ஷாலோம் பேராயர் தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். அநேக தேவ ஜனங்கள் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றுச் சென்றனர். வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் Rev. Dr. P. செல்லப்பா அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைகள்

## *C.S.I. தேவாலயம், குளத்துக்குடியிருப்பு – 30.12.2011*

கடந்த 30.12.2011 அன்று குளத்துக்குடியிருப்பு CSI தேவாலயத்தில் வைத்து நடைபெற்ற சுதேச ஊழியர் பிரதிஷ்டை ஆராதனையில் நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் இருவர் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். இந்தக் கூடுகையை **Rev. ஆன்ட்ரூ நவராஜ்** அவர்கள் தலைமை தாங்கி நடத்தித் தந்தார்கள். **சகோ. S. ஆலன் எல்விஸ்** அவர்கள் ஆராதனை வேளையை நடத்த, **சகோ. J. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொள்ள, நமது ஷாலோம் **பிஷப் தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். சுதேச ஊழியர்கள் தங்கள் சாட்கிகளை பகிர்ந்து கொண்டார்கள். **தேவனுக்கே மகிமை!**

**பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியர்களின் விபரம் :**

1. **சகோ. பதமிலால் M. மச்சார்** (கங்காதாலை, இராஜஸ்தான்),
   தாங்குவோர் : **சகோ. டக்லஸ் ஆன்ட்ரூஸ்,**
2. சகோ. சூப்பர் K. டாமோர் (அலிபுரா, மத்தியப்பிரதேசம்)
   தாங்குவோர் : **சகோ. ஜெபதாஸ் தினகரன்**

பிரதிஷ்டை ஆராதனை நடத்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Rev. ஆன்ட்ரூ நவராஜ்** அவர்களுக்கும், ஊழியர்களை தாங்க முன்வந்த ஆதரவாளர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

---

## *இயேசு ஆறுதல் அளிக்கிறார், மார்த்தாண்டம் – 01.01.2012*

கடந்த 01.01.2012 அன்ற மார்த்தாண்டம் தாசையா திருமண மண்டபத்தில் வைத்து, **இயேசு ஆறுதல் அளிக்கிறார்** ஊழியத்தின் சார்பில் நடைபெற்ற, நடைபெற்ற சுதேச ஊழியர் பிரதிஷ்டை ஆராதனையில் இந்த ஊழியத்தின் சார்பில் தாங்கப்படும் நமது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. மால்சிங் சொகாரியா** (சுலியா, மத்தியப்பிரதேசம்), அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

இந்தக் கூடுகை **Rev.V. இம்மானுவேல்,** அவர்கள் தலைமையில், **Rev.S. சாமுவேல்** அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. **சகோ. T. அருள்தாஸ்** (இயேசு ஆறுதல் அளிக்கிறார்) **அவர்கள்** தேவ செய்தியளித்தார்கள். **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் சுதேச ஊழியரின் சாட்சியை மொழியாக்கம் செய்தார்கள்.

பிரதிஷ்டை ஆராதனை நடத்த வாய்ப்பினை வழங்கிய **சகோ. T. அருள்தாஸ்** (இயேசு ஆறுதல் அளிக்கிறார்) அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். மேலும் ஷாலோம் மார்த்தாண்டம் பகுதி பிரதிநிதிகள் **சகோ. ஜார்ஜ்** மற்றும் **சகோ. கிங்பெர்ட்** மற்றும் நமது ஊழியர் **சகோ. செல்வதுரை** ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைகள்

## C.S.I. யோவான் ஸ்நானன் தேவாலயம், (Rev. M. Andrew Navaraj) குளத்துக்குடியிருப்பு – 30.12.2011

தாங்குவோர் : சகோ. டக்லஸ் ஆன்ட்ரூஸ், & சகோ. ஜெபதாஸ் தினகரன்


சுதேச ஊழியரின் சாட்சி வேளை


ஜெப வேளை




சுதேச ஊழியர்களுக்கு வழங்கப்படும் அன்பளிப்புகள்

## இயேசு ஆறுதல் அளிக்கிறார் ஊழியம், (சகோ. அருள்தாஸ்) மார்த்தாண்டம் – 01.01.2012


சுதேச ஊழியரின் சாட்சி வேளை


பிரதிஷ்டை வேளை


ஊழியருக்கு அன்பளிப்புகள் வழங்கப்படுகின்றன


கூடியிருந்த தேவ ஜனங்கள்

# ஷாலோம் சபை மூப்பர்களுக்கான புத்தாண்டு கூடுகைகள்



தேவ செய்தியளிக்கும் பிஷப் தேவதாஸ் அவர்கள்



கடந்த ஆண்டு தேவ செய்த மகத்தான காரியங்களை விவரிக்கும் சகோதரி வஹிதா தேவ்தாஸ் அவர்கள்



மூப்பர்களுக்காக ஜெபிக்கும் C.N.I. போதகர்



கூடிவந்திருந்த மூப்பர்கள்

# சமூதாய மறுரூபப் பயிற்சி




மேக்நகர் பகுதியில் மெழுகுவர்த்தி ஏற்றி I.C.T. பயிற்சியைத் துவக்கும் பிஷப் தேவதாஸ் அவர்கள்




மேக்நகர் பகுதி மாணவர்களுடன்




ஜாபுவா பகுதியில் மெழுகுவர்த்தி ஏற்றி I.C.T. பயிற்சியைத் துவக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்




ஜாபுவா பகுதி மாணவர்களுடன்

# பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகள் - 2011


கிறிஸ்மஸ் செய்தி – சகோதரி வஹிதா தேவதாஸ்


கூடியிருந்த பீல் ஆதிவாசி சிறுவர்கள்


சிறுவர்களின் கிறிஸ்மஸ் கலை நிகழ்ச்சிகள்


கிறிஸ்மஸ் தாத்தா வேடமணிந்து வாழ்த்துக்கள்

# சுதேச ஊழியர்களுக்கான புத்தாண்டு வாக்குத்தத்த கூட்டங்கள்


வாக்குத்தத்த செய்தி – பிஷப் தேவதாஸ் அவர்கள்


ஊழியப் பகிர்வு – சகோதரி வஹிதா தேவதாஸ்


கூடியிருந்த பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள்


ஆடல், பாடலுடன் தேவனை மகிமைப்படுத்தும் ஊழியர்கள்

# Madras Christian College Hr. Sec. School ஆசிரியர்களின் பணித்தள வருகை - 14.01.2012



குஜராத், குந்திகேடா கிராம ஆலய பிரதிஷ்டை



தேவ செய்தியளிக்கும் சகோ. மனோகர் அவர்கள்



குந்திகேடா கிராம ஆலயத்தில் கலாச்சார வரவேற்பு



ஆசிரியர்களின் சிறப்புப் பாடல்



பிஜல்பூர் விடுதி மாணவர்களுக்கான ஆலோசனை வழங்குதல்



பிஜல்பூர் விடுதி பீல் ஆதிவாசி சிறுவர்கள்



சிறுவர்களின் வரவேற்பு நடனம்



ஜெபத்தினை ஏறெடுக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ்

ùNuû] ¡±vRYd Lpí¬ B£¬VoL°u
T¦jR[ YÚûL 14.01.2012

***இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!***

தேவனுடைய பெரிதான கிருபையினால் ஷாலோம் **பிஷப் V. தேவதாஸ்** அவர்கள் எங்கள் M.C.C. பள்ளியில் வைத்து நடைபெற்ற ஜெபக்கூட்டத்தில் பங்கு பெற்று பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியங்களைக் குறித்த பகிர்ந்து கொண்டார்கள். அந்த வேளையில் எங்களுக்கு பீல் மக்களைக் குறித்த பாரத்தை தேவன் கொடுக்கவே, நாங்கள் ஒரு கிராம ஆலயத்தைக் கட்டி கொடுக்க முன் வந்தோம். அதன்படி எங்களோடு பணிபுரியும் **சகோ. டக்லஸ் ஆன்ட்ரூஸ்** அவர்கள் அனைத்து ஆசிரியர்களிடம் காணிக்கைகளைக் சேகரித்து ரூ. 1 லட்சம் அனுப்பி வைத்தார்கள். அதன்படி சென்னை கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியர்களாக இணைந்து 14.01.2012 அன்று ஷாலோம் பணித்தளத்தைப் பார்வையிடும்படியாகச் சென்றதைக் குறித்து மிகந்த சந்தோஷம் அடைகிறோம்.

மேலும் நாங்கள் அனுப்பிய காணிக்கை மூலமாகக் கட்டப்பட்ட குஜராத், தாகோத் மாவட்டத்திலுள்ள **குந்திகேடா கிராம ஆலயத்தையும்** பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை! இங்குள்ள சபை மக்களை காணும்போது அவர்கள் காண்பித்த உற்சாகம் ஆவிக்குரிய வாழ்வில் நாங்கள் இன்னும் எவ்வளவோ நெருங்கி வரவேண்டும் என காண்பிக்கிறது. ஆண்டவர் தாழ்மையிலிருந்து மக்களை உயர்த்துகிறார் என்பதற்கு ஷாலோம் மிஷனெரி ஊழியம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

பள்ளி மாணவர்களைப் பார்க்கும்போது மிகுந்த சந்தோஷமாக இருந்தது. சிறுவர்களுடைய கலை நிகழ்ச்சிகளும், சாட்சிகளும் எங்களை மெய் சிலிர்க்க வைத்தது. ஆசிரியர்களிடம் பேசும்போது அவர்களுடைய தேவைகளை அறிந்து அவர்களுக்கு ஆசிரியர்களாக நாங்கள் என்ன செய்ய முடியும் என்ற சவால் எழுந்தது. பிஷப் அவர்களின் மனைவி வஹிதா தேவதாஸ் அவர்கள் காண்பித்த பராமரிப்பும், உபசரிப்பும் எங்களை மிகுந்த சந்தோஷப்படுத்தியது. அவர்களுடைய சாட்சி உண்மையிலேயே, ஆண்டவரை பற்றிக் கொண்டிருக்கும்போது எப்படி அவர் நம்மை வழிநடத்துகிறார் என்பதைக் காட்டியது. சங்கீதம் 91 ல் உள்ள பாதுகாப்பு அவர்கள் வாழ்வில் நிறைவேறக் கண்டோம். தங்களுடைய குடும்பத்தாரில் ஒருவராக எங்களை ஏற்றுக்கொண்டு ஊழியம் செய்ய வாய்ப்பளித்தமைக்காக தேவனுக்கு நன்றி கூறுகிறோம். நாங்கள் பள்ளியாக, ஆசிரியராக சேர்ந்து இந்த ஆலயத்தை கட்டிக் கொடுத்தோம். இதைப்போல மற்ற ஆசிரியர்களும், மற்ற கல்வி நிறுவனங்களும் ஈடுபடவேண்டும் என்று உற்சாகப்படுத்துகிறோம். நீங்களும் பீல் ஆதிவாசி மாணவர்களைத் தாங்க முன் வரவேண்டும் என்று நினைவுபடுத்துகிறோம். ஏனெனில் யாரிடத்தில் அதிகம் கொடுக்கப்பட்டதோ அவர்களிடம் அதிகம் கேட்கப்படும் என்பதை மறந்து போகாதீர்கள். இத்தனை தேவையுள்ள பீல் ஆதிவாசி மக்களுக்கு உதவி செய்யவேண்டும்.

**திரு. காபிரியேல் மனோகர்** (தலைமை ஆசிரியர்) **மற்றும் ஆசிரியர்கள்**

Madras Christian College School, Chennai

# 2011ல் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதமான காரியங்கள்

2011–ம் வருடத்தில் ஆரம்ப முதல் இறுதி வரை தேவனுடைய வல்லமையுள்ள கரம் எங்களோடும், ஷாலோம் ஊழியத்தில் உள்ள அனைத்து ஊழியர்களோடும் கூட இருந்து வழிநடத்தியதை அனுதினமும் உணர்ந்தோம். **"இதோ நான் புதிய காரியத்தை செய்கிறேன். அது இப்போழுதே தோன்றும்"** என்ற வாக்குத்தத்தத்தின்படியே, தேவன் புதிய காரியங்களை ஒவ்வொரு மாதமும் செய்தார். தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம்.

**ஊழியர்கள் கூட்டம்**

ஒவ்வொரு மாதமும் ஊழியர்கள் கூடுகை 4 இடங்களில் மிகவும் சிறப்பாய் நடைபெற்றது. குஜராத் மற்றும் மத்தியபிரதேசம் ஊழியர்களுக்கு Dahod Centre லும் இராஜஸ்தானில் கோய்க்கா மற்றும் ஹேஜாமலிலும் கூட்டங்கள் நடைபெற்றன. ஊழியர்கள் மிகவும் உற்சாகமாய் ஆவியில் நிறைந்து ஆத்தும பாரத்துடன் ஜெபித்து ஒவ்வொரு மாதமும் ஊழியம் செய்தார்கள்.

**மூத்த ஊழியர்கள் கூட்டம்**

மூன்று இராஜ்யங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியமான ஊழியர்கள் Co-ordinators & Area leaders ஆக நியமிக்கப்பட்டு அவர்களுக்கென்று இராஜ்ய வாரியாக தனித்தனியாக கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் அதிகமாய் ஜெபித்து திட்டங்களையும், ஆலோசனைகளையும் பெற்று செயல்பட்டார்கள்.

**ஊழியக்காரிகள் கூட்டம்**

மாதத்தின் முதல் நாள் 1ம் தேதி Dahod Centre ல் முக்கியமான ஊழியக்காரிகள் (Pastors' wives) 100 பேர் இணைந்து உபவாச ஜெபம் மற்றும் ஆராதனை நடத்த தேவன் கிருபை செய்தார். இந்த கூட்டத்தில் அந்தந்த மாதம் நடைபெற உள்ள அனைத்து programme க்கான விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் தலைமையில் இந்த கூட்டங்கள் நடைபெற்றன.

மட்டுமல்லாமல் இந்த ஊழியக்காரிகள் தங்கள் பகுதிகளுக்கு சென்று மற்ற ஊழியக்காரிகளுக்கு area wise ஆக கூடி மூன்று இராஜ்ஜியங்களிலும் சேர்த்து 30 இடங்களில் கூட்டங்கள் நடத்தினார்கள். இப்படியாக மாதந்தோறும் 450 ஊழியக்காரிகளுக்கு கூட்டங்கள் நடத்தப்பட்டது. மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் அனைத்து 450 சுதேச ஊழியர் மனைவிமார்களுக்கும், அந்தந்த பகுதிகளுக்கு சென்று விசேஷித்த கூட்டம் மூன்று இராஜ்யங்களிலும் சேர்த்து 12 இடங்களில் நடத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**பணித்தள அலுவலக ஊழியர் கூடுகை**

ஒவ்வொரு மாதமும் 2–ம் தேதி பணித்தள அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலகர்களுக்கு விசேஷித்த கூட்டங்கள் Bishop Devadass அவர்களால் நடத்தப்பட்டன.

## பணித்தள திட்ட ஊழியர் கூடுகை

ஒவ்வொரு மாதமும் 30ம் தேதி compassion project (Hirola & Jeri) யிலுள்ள staff –களுக்கும், மற்றும் Alp Project (Guj) Staff களுக்கும் Dahod Centre லும், 29ம் தேதி Compassion Anthervelia (MP) staff களுக்கும், ALP MP staff களுக்கும் Anthervelia Church ல் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

## மூப்பர்கள் எழுப்புதல் கூடுகைகள்

3 மாநிலங்களிலும் 600 சபைகளை பகுதி வாரியாக பிரித்து 15 இடங்களில் விசேஷித்த மூப்பர்கள் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் Bishop V. Devadass அவர்கள் விசேஷ செய்தி அளித்தார்கள். இந்த கூட்டத்தின் மூலம் மூப்பர்கள் ஆவியில் பெலன் கொண்டு, சபையை பொறுப்புடன் நடத்தவும், சபையின் போதகருடன் இணைந்து ஜெபித்து செயல்படவும் தங்களை ஒப்புக்கொடுத்து, செயல்பட்டு வருகிறார்கள்.

## மூப்பர்களின் மனைவிமார்களின் கூட்டங்கள்

3 மாநிலங்களிலும் உள்ள சபையின் மூப்பர்களின் மனைவிமார்களுக்கென்று சுமார் 12 இடங்களில் விசேஷித்த கூட்டங்கள் நடத்தப்பட்டது. சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களும் மற்றும் பெண்கள் குழுவும் சேர்ந்து இதை நடத்தினார்கள். பெண்கள் அபிஷேகத்தினால் நிறைந்து தேவனுக்காக மிகுந்த வைராக்கியமாய் எழும்பி சபையில் சுதேச ஊழியர் மனைவிமார்களுடன் இணைந்து ஊழியம் செய்கிறார்கள்.

## பெண்கள் ஊழியம்

மூத்த சுதேச ஊழிய மனைவிமார்களில் 2 பேர் கொண்ட 30 குழுக்களாக பிரித்து 3 மாநிலங்களில் உள்ள 600 சபைகளிலும் உள்ள பெண்களுக்கு ஊழியம் செய்யும்படியாய் அனுப்பப்பட்டார்கள். கடந்த வருடம் 12 மாதத்திற்குள் இந்த ஊழியத்தை பெண்கள் நிறைவேற்றினார்கள். இதில் தேவன் மகத்தான காரியங்களை ஊழியக்காரிகள் மூலம் செய்தார். சபைகளில் பெண்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், ஜெப ஆவியையும், ஆத்தும பாரத்தையும் பெற்று அழுது ஜெபித்தார்கள்.

## ஷாலோம் சபைகளின் ஞாயிறு ஆராதனைகள்

ஷாலோம் ஊழியத்தில் தேவன் கொடுத்த அனைத்து சபைகளிலும் வாரந்தோறும் ஒழுங்காக ஞாயிறு ஆராதனைகள் நடைபெறும்படியாய் கிருபை செய்தார். போதகர்கள், சுதேச ஊழியர்கள் மற்றும் மூப்பர்கள் இந்த ஆராதனையை பொறுப்போடு நடத்தினார்கள்.

## சிறப்பு துதி ஆராதனைகள்

இரண்டு மாதத்திற்கு ஒரு முறை முக்கிய ஊழியக்காரிகளாக 70 பேர் கூடி Dahod Centre–ல் வைத்து மாலை 5 மணி முதல் இரவு 11 வரை தொடர்ந்து 6 மணி நேரம் துதி ஆராதனை செய்தார்கள். இதில் நடனமாடி தேவனை துதித்து, ஆவியில் நிறைந்து தேவனை ஆராதிப்பதை பார்த்தால் பரலோகம் இறங்கி வந்தது போல காணப்பட்டது. இந்த ஆராதனையில் சிலர் அற்புத சுகம் பெற்றார்கள். ஆவியில் உற்சாகமடைந்தார்கள்.

**ஷாலோம் சிறுவர் முகாம்கள்**

கடந்த ஆண்டில் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநில சபைகளிலும் 6 வயது முதல் 12 வயது வரை உள்ள சிறுவர்களுக்கென்று 7 இடத்தில் விசேஷித்த முகாம்கள் நடத்தப்பட்டது. இதில் 2781 பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இந்த முகாமில் Action Songs, Group discussion, மனப்பாட வசனம், Quiz programme, Puppet Show நடத்தப்பட்டன. இந்த முகாமின் தலைப்பு **“எனது அழகான இருதயம்”** என்பதாகும்.

இதை குறித்து சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் பிள்ளைகளுக்கு கதை மூலம் செய்தி அளித்தார்கள். ஆராதனை வேளையில் பிள்ளைகள் அபிஷேகம் பெற்றார்கள். Quiz–ல் பிள்ளைகளுக்கு உற்சாகப்படுத்தும்படியாய் பரிசுகள் வழங்கப்பட்டன. பங்கு பெற்ற யாவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. இந்த முகாம்களில் IPM (Guj), Jesawada (Guj), Gadwada (MP), Bijalpur (Raj) ஆகிய Hostel மாணவ, மாணவிகளும் பங்கு பெற்றார்கள்.

இதே போன்று CDC Hirola (Guj), CDC Jeri (Guj), CDC Anthervelia (MP) இந்த சிறுவர்களுக்கென்று தனித்தனியே ஒரு நாள் முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாம் மூலம் விசுவாசி குடும்பம் அல்லாத பிள்ளைகளும் கூட இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். முக்கியமாக இந்த பிள்ளைகளின் மூலம் பெற்றோர்களும் இயேசுவை விசுவாசிக்கிறார்கள்.

**ஷாலோம் பீல் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம்**

வருடத்திற்கு ஒரு முறை ஷாலோம் ஊழியர்களுக்கு குடும்ப முகாம் 3 நாட்கள் நடைபெறும். அதில் **சகோ. மோகன் சி லாசரஸ்** அவர்கள் வருடந்தோறும் வந்து விசேஷ செய்தி அளித்து அபிஷேகத்திற்குள் நடத்துவார்கள். இந்த வருடம் வர முடியவில்லை. ஆனாலும் முகாமிற்கு உரிய செலவு மற்றும் ஊழியர்களுக்கு பரிசு எல்லாம் கொடுத்து பரவசப்படுத்தினார்கள்.

2011 ம் ஆண்டு போதகர் ராஜன் எட்வர்ட் அவர்கள் குடும்பமாகவும், அவர்கள் மகன் குடும்பமாகவும் வந்து பங்கெடுத்து விசேஷ செய்திகளை வழங்கினார்கள். சகோதரர் அகஸ்டின் ராஜசேகர் அவர்களும் விசேஷ செய்திகளை வழங்கினார்கள். Bishop. Devadass அவர்களும், சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களும், இயேசு விடுவிக்கிறாரிலிருந்து சகோ. கிங்ஸ்லி அவர்களும், Seva Bharat Director Dr. Chiranjeevi அவர்களும் வந்து செய்தி அளித்தார்கள். குடும்ப முகாம் மிக சிறப்பாக நடைபெற்றது. போதகர் டேனியல் குழுவாக வந்து ஆராதனை நடத்தி பரவசப்படுத்தினார்கள். ஊழியர்கள் அபரிவிதமான ஆசீர்வாதத்தை பெற்றார்கள்.

## சிறப்பு பயிற்சிகள் (Special Training)

**ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர் பயிற்சி**

கடந்த ஆண்டு 3 இராஜ்ஜியங்களிலுள்ள எல்லா சபைகளிலிருந்தும் வாலிபர்களை தெரிந்தெடுத்து அதாவது 25 பிள்ளைகளுக்கு 1 ஆசிரியர் வீதம் சுமார் 300 ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. இதில் Sunday class நடத்துவதை பார்வையிட 5 மேற்பார்வையாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. Register, Offering Box, Books, Charts, மனப்பாட வசனம் என்று எல்லாவற்றையும் பராமரிப்பதற்கும், சிறப்பு

பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஆசிரியர்கள் மிகவும் உற்சாகத்தோடும், பொறுப்போடும் ஞாயிறு பள்ளிகளை நடத்தி வருகிறார்கள்.

**விடுமுறை வேதாகம பள்ளி ஆசிரியர் பயிற்சி**

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் 450 ஊழியர்களுக்கும் சுமார் 200 Sunday Class Teachers –க்கும் CBC நடத்தும்படியான பயிற்சி கொடுக்கப்பட்டது. CBC யின் Theme "Living Word Bible"என்பதாகும். புத்தகங்களும், Work Books, Charts, Teachers Guide, Song Books & CD எல்லாமே நாமே உருவாக்கி பயிற்சி கொடுக்க தேவன் கிருபை செய்தார்.

**புதிய சுதேச ஊழியர் பயிற்சி**

புதிய கிராமங்களிலிருந்து ஊழியம் செய்ய அழைப்பு மற்றும் வாஞ்சையுள்ள 30 ஊழியர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஒருமாத குறுகிய கால வேதாகம பயிற்சி நடத்தப்பட்டது.

**ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம் - Medical Health Training**

2011–லும் சுதேச ஊழியர்களின் மனைவிமார்களுக்கு விசேஷ மருத்துவ சுகாதார பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இந்த பயிற்சி 5 நாட்கள் நடத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதில் 60 பேர் பயிற்சி பெற்று உடல் ஆரோக்கியம் பற்றி அறிந்து கொண்டார்கள். Dr. Abel, Dr. Jolly Abel, Dr. Inba, Sis. Vanaja இவர்கள் இந்த பயிற்சி வகுப்புகளை நடத்தினார்கள்.

**10 லட்சம் ஆத்துமாக்கள் அறுவடைத்திட்ட சிறப்பு பயிற்சி**

கர்த்தரால் விசேஷமாய் தேர்ந்தெடுக்கப்பட்ட 48 ஊழியர்கள் குடும்பத்திற்கு விசேஷித்த பயிற்சி இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடியில் வைத்து, சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களால் நடத்தப்பட்டது. இதில் Bro. Augustine Rajasekar, Bro. Sam Jebaraj, Bishop. Devadass, Sis. Vahitha Devadass, Prof. Christopher, Pas. Daniel ஆகியோரும் இணைந்து பயிற்சி கொடுத்தார்கள். விசேஷித்த அபிஷேகம் மற்றும் தரிசனங்கள், ஆத்தும பாரம் பெற்றார்கள். இவர்கள் மூலமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 12 இடங்களில் சுகமளிக்கும் கூட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. ஒரு வருடத்தில் சுமார் 500 கூட்டங்கள் நடத்தப்பட்டு, ஒரு வருடத்திற்கு 25 ஆயிரம் புதிய குடும்பங்கள் தேவனை ஏற்றுக் கொள்வார்கள் என்ற விசுவாசத்துடன் ஊழியங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இது வரை கடந்த ஆண்டு 5 மாத ஊழியத்தில் 48 இடங்களில், 803 புதிய ஆத்துமாக்களும், 2115 பேர் பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் வியாதியிலிருந்து 2894 பேர் அற்புத சுகமும் பெற்றுள்ளார்கள்.

**சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்**

முதியோர் கல்வி திட்டத்தின் மூலம் பயனடைந்த சபையின் விசுவாசி ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஸ்தாபனம் மூலம் விசேஷ சுய வேலை வாய்ப்புப் பயிற்சிக்கு வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில் சுமார் 400 பேர் பயனடைந்தார்கள். இதில் சோப்பு, மெழுகுவர்த்தி, சோப்புப் பொடி, ஜாம், ஊறுகாய், பினாயில் செய்வதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**வேத பாட பரீட்சை**

2011–ல் ஊழியர்களுக்கும், ஊழியக்கார பெண்களுக்கும் வேத பாட பரீட்சை நடத்தப்பட்டது. ஊழியர்களுக்கு 4 சுவிசேஷங்களிலிருந்து எழுத்து பரீட்சை நடத்தப்பட்டது. ஊழியக்காரிகளுக்கு புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் உள்ள அனைத்து ஜெபங்கள் மற்றும் ஜெபத்தை பற்றிய வசனங்கள் அனைத்தும் அச்சடித்து கொடுக்கப்பட்டது. அவர்கள் முழுவதையும் மனப்பாடமாக படித்து ஒப்புவித்தார்கள். இவர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

**விடுமுறை வேதாகம பள்ளி திட்டம் (CBC)**

2011–ம் ஆண்டில் "Living Word Bible" என்ற தலைப்பில் மே மாதம் 10 நாட்கள் CBC வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில் சுமார் 30,000 பிள்ளைகள் பங்கு பெற்று ஆசீர்வாதம் பெற்றார்கள். இதில் கிராமங்களில் உள்ள விசுவாசிகள் அல்லாத குடும்பத்தில் உள்ள பிள்ளைகளும் பங்கு பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெப ஊழியங்கள்

**சங்கிலித் தொடர் ஜெபம் (Chain Prayer)**

கடந்த வருடம் முழுவதும் தினமும் ஒரு குடும்பம் (ஊழியர் குடும்பம்) Dahod Centre–ல் உள்ள ஜெப அறையில் உபவாசத்தோடு காலை முதல் மாலை வரை ஜெபம் செய்தார்கள். இப்படியாக, பீல் மக்களின் இரட்சிப்பிற்காக வருடம் முழுவதும் சங்கிலித் தொடர் ஜெபம் நடைபெற்றது.

**முழு இரவு ஜெபம் (All Night Prayer)**

கடந்த ஆண்டில் மாதம் ஒரு முறை என்று ஊழியர்கள் ஒரு மாதம், ஊழியக்காரிகள் ஒரு மாதம் என்று முறைப்படுத்தி ஒவ்வொரு மாதமும் முழு இரவு ஜெபம் நடத்தும்படியாக தேவன் கிருபை செய்தார். இப்படிப்பட்ட ஜெபத்தின் மூலமாக தான் பீல் மக்கள் மத்தியில் ஊழியம் வளர்ந்து வருகிறது.

**அந்நிய பாஷை ஜெபம் (Tongue Prayer)**

ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் ஊழியக்கார பெண்கள் 3 இராஜ்ஜியத்திலும் 7 குழுவாக கூடி 3 மணி நேரம் அந்நிய பாஷை ஜெபத்தை ஏறெடுக்க தேவன் கிருபை செய்தார். இந்த ஜெபத்தில் தேவன் அநேக தரிசனங்களை காட்டி எங்களை பெலப்படுத்துகிறார். மட்டுமல்லாமல் இந்த ஜெபத்தின் மூலம் அநேகர் அற்புத சுகம் பெற்றுள்ளார்கள்.

**பெண்கள் உபவாச ஜெபம் ( Fasting Prayer)**

450 சுதேச ஊழியர்களின் மனைவிமார்களும், குழுவாக குழுவாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் ஒரு வாரம் என்று அமைத்து கடந்த ஆண்டில் 365 நாட்களும் உபவாசித்து ஜெபித்தார்கள். இதனால் அந்த பகுதியில் உள்ள அந்தகாரம் நீங்கி, மக்கள் சுவிசேஷத்திற்கு செவி சாய்க்கிறார்கள். மற்றும் அனைத்து ஊழியக்காரிகளும் 1 நாள், 3 நாள், 21 நாள், 40 நாள் என்று உபவாச ஜெபம் செய்யும்படியாக தங்கள் பெயர்களை இணைத்துக் கொண்டு உபவாசித்து ஜெபித்தார்கள்.

**பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான ஜெபம் (Students Prayer)**

கடந்த ஆண்டு 10, +2 பரீட்சை எழுதும் மாணவர்களுக்கென்று விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. 3 இராஜ்ஜியங்களிலும் 3 நாட்கள் நடத்தப்பட்டன. சுமார் 1000 க்கும் அதிகமான பேர் பங்கு பெற்றார்கள். இந்த ஜெபம் மிகுந்த ஆசீர்வாதத்தை மாணவர்களுக்கு கொண்டு வந்தது. பிள்ளைகள் தேவ கிருபையால், 70% to 80% என்று மதிப்பெண்கள் பெற்று உயர் படிப்பிற்கு சென்றுள்ளார்கள்.

**நாற்பது நாள் உபவாச ஜெபம்**

சபையின் விசுவாசிகள் ஆண்கள், பெண்கள் அனைவரும் வருடத்திற்கு ஒரு முறை லெந்து நாட்களில் 40 நாட்கள் உபவாசம் இருந்து ஜெபிக்கிறார்கள். கடந்த ஆண்டில் சபைகளில் யாவரும் உபவாசித்து ஜெபித்தார்கள். மட்டுமல்லாமல் அந்த நாட்களில் வெள்ளிக்கிழமை தோறும் ஆலயத்தில் உபவாச ஜெபம் நடைபெற்றது. மற்றும் அந்த 40 நாட்களில் சபைகளில் ஒவ்வொரு விசுவாச குடும்பமும் ஒரு நாள் என்று ஆலயத்தில் சென்று சங்கிலி தொடர் ஜெபம் அந்தந்த சபைகளில் நடைபெற்றது. இந்த நாட்களில் ஜெபித்து ஞானஸ்நானம் எடுக்காதவர்கள் ஞானஸ்நானத்திற்கும், Holy Communion -க்காக ஆயத்தப்பட்டும் வருகிறார்கள்.

**தொலைபேசி ஜெப ஊழியம்**

தினந்தோறும் தொலைபேசி மூலமாக ஜெபிக்கிறவர்கள் ஏராளம். விசுவாசிகளும் மற்றவர்களும் கூட கிராமங்களிலும், வெளியிடங்களிலும் இருக்கிறவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விசுவாசமாய் ஜெபித்து, அற்புத சுகத்தையும், சமாதானத்தையும் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள்.

**ஈஸ்டர் ஞாயிறு (Easter)**

இயேசுவின் உயிர்த்தெழுதலை உண்மையாய் உணர்ந்து மகிழ்ச்சியோடு கொண்டாடினார்கள். 40 நாட்கள் உபவாசம் இருந்து ஜெபித்து, ஆயத்தமாகி Easter –ஐ கொண்டாடினார்கள். எல்லா சபைகளிலும் இந்த ஆராதனை நடத்தப்பட்டது.

**ஷாலோம் அற்புதத்தின் நாள் (Shalom Miracle Day)**

2011–ம் ஆண்டில் செப்டம்பர் 30ம் தேதி Shalom Miracle Day நடத்தப்பட்டது. எல்லா சபைகளிலும் புதிய ஆத்துமாக்களை தேவன் கொண்டு வந்து பெரிய பெரிய அற்புதங்களை செய்தார். **Dr. பால் தினகரன்** (இயேசு அழைக்கிறார்) அவர்கள் ஜெபித்து ஜெப எண்ணெயை அனுப்பியிருந்தார்கள். சுமார் 4000 க்கும் அதிகமான அற்புதங்கள் ஒரே நாளில் தேவன் நடத்தினார். இதன் மூலம் சுமார் 500க்கும் அதிகமான குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்.

**ஷாலோம் மிஷன் ஞாயிறு (Shalom Mission Sunday)**

கடந்த அக்டோபர் 9,16,23 தேதிகளில் Guj, MP, Raj முறையே Shalom Mission Sunday நடைபெற்றது. விசுவாசிகள் மிகவும் உற்சாகமாய்க் கொண்டாடி, கவர் காணிக்கையை

செலுத்தினார்கள். சொந்த ஜனம் இயேசுவை அறிய வேண்டும் என்றும், ஷாலோம் ஊழியம் வளர்ந்து பெருக வேண்டும் என்றும், சுமார் 14 இலட்ச ரூபாய் காணிக்கை கொடுத்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

**ஷாலோம் திருமண்டல தினம் – Shalom Diocese Day**

கடந்த நவம்பர் 20ம் தேதி Shalom Diocese Day என்று கொண்டாடப்பட்டது. தேவன் தந்த திருச்சபைகளுக்காக, ஷாலோம் திருமண்டலத்திற்காக தேவனைத் துதித்து, ஒவ்வொரு ஷாலோம் சபையிலும் இந்த நாளை பொன்னாளாகக் கருதி சந்தோஷமாய் கொண்டாடினார்கள். மேலும் ஷாலோம் திருச்சபைகள் ஆத்தும ஆதாயம் செய்யும் சபைகளாகவும், ஜெபிக்கும் சபைகளாகவும், தேவனுக்கு கொடுக்கும் சபைகளாகவும், முன்மாதிரியான சபைகளாகவும் விளங்க ஊழியர்களும் விசுவாசிகளும் அர்ப்பணித்து செயல்பட்டு வருகின்றனர்.

**திருச்சபை கட்டும் பணிகள் (Church Planting)**

இது வரை ஷாலோம் ஊழியத்தின் மூலமாக நமது பணித்தளங்களில், 215 ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. இதில் கடந்த 2011ல் எட்டு ஆலயங்களைக் கட்டியெழுப்ப தேவன் கிருபை செய்துள்ளார் தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம். மேலும் சிறிய ஆலயங்கள் எல்லாம் பெரிய ஆலயங்களாக விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இந்த 2012 ம் ஆண்டில் 100 ஆலயங்கள் கட்டப்பட வேண்டும்.

**திருவிருந்து ஆராதனைகள் (Holy Communions)**

நமது ஷாலோம் திருச்சபைகளில் திருவிருந்து ஆராதனைகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் ஆசரிக்கப்பட்டு வருகிறது. அபிஷேகம் பெற்ற போதகர்கள் இதை நடத்துகிறார்கள். இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்தவர்களுக்கு கொடுக்கப்படுகிறது.

**Bible Society Award (Bible Distribution)**

ஒவ்வொரு வருடமும் Gujarat Bible Society யிலிருந்து வேதாகமம் அதிகமாய் விநியோகித்த ஸ்தாபனத்திற்கு விருது கொடுக்கப்படும். ஒவ்வொரு வருடமும் ஷாலோம் ஊழியத்திற்கு அந்த விருது கிடைப்பது மிக சந்தோஷமான காரியம். 2011–லும் இந்த ஆசீர்வாதம் நமக்கு கிடைத்திருப்பதால் தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம்.

## பிற திட்டங்களும் செயல்பாடுகளும்

**சுதேச ஊழியர்களுக்கான சிறப்பு பயிற்சி (Institute Of Community Transformation)**

'Seva Bharat' ஸ்தாபனம் மூலமாக நமக்கு ICT Project கிடைத்தது. கடந்த வருடம் இராஜஸ்தான் மற்றும் மத்தியபிரதேசத்திலிருந்து 20 ஊழியர்கள் பயிற்சி பெற்றார்கள். பின்பு குஜராத், இராஜஸ்தான் மாநிலத்திற்கும் ICT Project கிடைக்கப் பெற்று மறுபடி 20 ஊழியர்கள் இதில் இணைந்து பயிற்சி எடுத்தார்கள். இந்த Project 2 வருடத்திற்கு நடைபெறும்.

**முதியோர் கல்வித் திட்டம் (ALP Project)**

'Seva Bharat' மூலமாக முதியோர் கல்வித்திட்டம் கடந்த ஆண்டு கொடுக்கப்பட்டது.

மத்தியபிரதேசத்திற்கு 50 மையங்களும், குஜராத்திற்கு 10 மையங்களும் மொத்தம் 60 மையங்கள் தரப்பட்டன. 60 கிராமங்களில் உள்ள நம் சபையின் விசுவாசிகள் இதன் மூலம் எழுதப் படிக்க கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**மருத்துவ முகாம்கள் Medical Camps**

வருடந்தோறும் இலவச மருத்துவ முகாம் நடத்தி வருகிறோம். கடந்த ஆண்டிலும் இரண்டு முறை மருத்துவ முகாம் மூன்று இராஜ்யங்களிலும் நடத்த தேவன் கிருபை செய்தார். இதில் சுமார் 3500 மக்கள் பயனடைந்தார்கள். Dr. Abel, Dr. Jolly Abel, Dr. Inbakumar மற்றும் குழுவினர்கள் வந்து இந்த முகாமை சிறப்பாய் நடத்தி கொடுத்தார்கள்.

**பாடல் CDs வெளியீடு**

கடந்த ஆண்டிலும் பாடல்கள் CD வெளியிடும்படியாய் ஆண்டவர் கிருபை கொடுத்தார். Good Friday Message மற்றும் Easter Songs பீலி, பிலோடி, வாகுடி பாடல்கள் CBC Children Songs (Hindi) வெளியிடும் படியாக தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!

**ஆழ்குழாய் கிணறு** (Hand Pumps)

குடிநீர் தட்டுப்பாடுள்ள பீல் ஆதிவாசி விசுவாசிகள் உள்ள கிராமங்களில் CBN ஸ்தாபனம் & ஷாலோம் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஆழ்குழாய் கிணறு குடிநீர் குழாய்கள் (Hand Pumps) அமைத்துத் தரப்படுகின்றன. கடந்த ஆண்டில் 25 Hand Pumps போடப்பட்டன.

**ஆதிவாசி சிறுவர் பராமரிப்புத் திட்டங்கள்** (CDC Projects)

'Compassion India' மூலமாக நாம் நடத்தி வரும் CDC - Hirola (Guj) மற்றும் CDC - Jeri (Guj), CDC - Anthervelia (MP) மூன்று Children Project –ம் கடந்த ஆண்டு மிகுந்த சிறப்பாய் எந்த எதிர்ப்பும் இல்லாமல் நடைபெற தேவன் கிருபை செய்தார். மொத்தம் 741 பிள்ளைகள் கல்வி பயின்று வருகிறார்கள். இவர்களுக்கு உணவு, உடை, Tuition மற்றும் எல்லா வசதிகளும் கொடுக்கப்பட்டு வருகிறது. Camps, Music, Scripture, தையல் கலை எல்லாம் கற்று தரப்படுகிறது.

**ஷாலோம் பள்ளி** (Shalom School)

கடந்த 10 வருடங்களாக பிஜல்பூரில் (இராஜஸ்தான்) நமது பள்ளிப் பணியை தேவன் ஆசீர்வதித்து வருகிறார். 8–ம் வகுப்பு வரை இதில் உள்ளது. சுமார் 325 பிள்ளைகள் கல்வி பயிலுகிறார்கள். நமது பிள்ளைகள் எல்லாவற்றிலும் முன்னேறி வருகிறார்கள். படிப்பிலும், விளையாட்டிலும் மற்றும் ஒழுக்கத்திலும், வேத அறிவிலும் முன்னேறி வருகிறார்கள். கடந்த ஆண்டு பள்ளி அறை கட்டுவதற்கு தேவன் கிருபை செய்தார். ஆசிரியர்களும் நன்கு அர்ப்பணிப்போடு பணி செய்து வருகிறார்கள்.

**ஷாலோம் விடுதி** (Shalom Hostel)

IPM Mission - Jhalod (Guj) – ல் 34 பிள்ளைகளும்,
Shalom Hostel - Jesawada (Guj) – ல் 27 பிள்ளைகளும்,
Shalom Hostel - Gadwada (MP) – ல் 54 பிள்ளைகளும்,
Shalom Hostel - Harinagar (MP) – ல் 25 பிள்ளைகளும்,

Shalom Hostel - Bijalpur (Raj) – ல் 218 பிள்ளைகளும்,

Shalom Hostel - Goika (Raj) – ல் 32 பிள்ளைகளும்,

மற்றும் வீட்டிலிருந்து பள்ளிக்கு போகிற ஊழியர் பிள்ளைகள் மற்றும் விசுவாசி பிள்ளைகள் 550 பேரை நாம் தாங்கி வருகிறோம். பிள்ளைகள் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள்.

**ஷாலோம் திருச்சபை ஒருங்கிணைப்புப் பணிகள் (Shalom Church Network)**

வளர்ந்து வரும் Sharing Love Mission ஊழியத்தில் சபைகள், விசுவாசிகள், ஊழியர்கள் பெருகி வரவே இதையெல்லாம் ஒழுங்கும் கிரமமுமாய் ஒருங்கிணைத்து செயல்படும் படியாய் Shalom Diocese in India Network Ministry ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில் Mr & Mrs. Karthick மற்றும் 2 ஊழியர்கள் இணைந்து செயல்படுகிறார்கள்.

**பணித்தள பார்வையாளர்கள் (Field Visitors)**

கடந்த ஆண்டில் பணித்தளத்தை பார்வையிடும்படியாக அநேக ஜெப பங்காளர்கள் வந்திருந்தார்கள். வந்து பார்வையிட்டு தேவனை மகிமைப்படுத்தினது மட்டுமல்லாமல் அதிகமாய் ஆத்தும பாரம் பெற்றவர்களாய் இன்னும் அதிகமாய் ஜெபிக்க கடமைப்பட்டவர்களாயும் சென்றார்கள்.

**கிறிஸ்மஸ் சிறுவர் சிறப்பு நிகழ்ச்சிகள்**

Guj, MP ஊழியக்காரர் பிள்ளைகள் மற்றும் நாம் தாங்குகிற விசுவாசி பிள்ளைகளுக்கும் விசேஷமாக X-Mas Children Programme நடத்தப்பட்டது. மற்றும் Bijalpur (Raj) Children–க்கும், CDC -Hirola (Guj) பிள்ளைகளுக்கும், CDC-Jeri (Guj) பிள்ளைகளுக்கும், CDC - Anthervelia (MP) பிள்ளைகளுக்கும் தனித்தனியாக X-mas programme மிகவும் சிறப்பாய் நடைபெற்றது.

**கிறிஸ்மஸ் கீத ஆராதனைகள் மற்றும் பண்டிகை ஆராதனைகள்**

கிறிஸ்மஸ் அன்று தங்கள் தங்கள் கிராமத்தில் அனைவரையுமே சபைக்கு அழைத்து கொண்டாடினார்கள். எல்லா சபைகளுமே நிறைந்து வழிந்தது. மக்கள் திரளாய் வந்து கிறிஸ்மஸ் கொண்டாடினார்கள். வந்திருந்த அனைவருக்கும் ஆலயத்தில் விருந்து சாப்பாடு கொடுக்கப்பட்டது. அநேக சபைகளில் 1000, 1500, 2000 என்று கூடி வந்தார்கள். சில சபைகளில் அந்தந்த பகுதிகளில் உள்ள MLA–க்கள் வந்து பங்குபெற்றார்கள்.

**கிறிஸ்மஸ் மேளா**

இராஜஸ்தானில் 2 இடங்களில் அந்தந்த பிராந்திய சபைகள் எல்லாம் கூடி ஒரு நாள் முழுவதும் கிறிஸ்மஸ் மேளா கொண்டாடினார்கள். அநேக கிராம மக்கள் திரளாய் கூடி வந்தார்கள். இதில் குசல்கட் தாலுகாவைச் சேர்ந்த Block leader **Mr. Sowlal Dindor** பங்கேற்று மக்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை கூறினார். சபைக்கும் கிறிஸ்தவர்களுக்கும் வேண்டிய எல்லா உதவிகளும் செய்து தருவதாக உறுதியளித்தார். வந்தவர்களுக்கு இயேசுவின் பிறப்பின் செய்தியை பற்றி நற்செய்தி அறிவிக்கப்பட்டது.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

## *ஷாலோம் ஜெபக் கூடுகைகள்*

தேவனுடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் நமது ஷாலோம் ஜெபக் கூடுகைகள் நமது ஷாலோம் ஆதரவாளர்களின் இல்லங்களில் நடைபெற்று வருகிறது. இறுதி நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட ஜெபம் மிகவும் அவசியம், எனவே தேவனுடைய திட்டத்தின்படி இந்த நாட்களில் ஜெபக்கூடுகைகள் **ஒவ்வொரு மாதமும்** நடைபெற்று வருகின்றன. இந்தக் கூடுகைகளில் தேசத்திற்காக, ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக, குடும்பங்களுக்காக, ஜெபித்து வருகிறோம். தற்பொழுது நடைபெற்றுவரும் ஜெபக் கூடுகைகளின் விபரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

மேலும் உங்கள் இல்லங்களிலும், உங்கள் பகுதிகளிலும் ஜெபக்கூடுகைகள் நடத்த நீங்கள் விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் ஷாலோம் ஊழியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஆலோசனைகளையும், ஜெபக்குறிப்புகளையும் வழங்குகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய ***தொலைபேசி : 0461 – 2375468, செல் : 9345675468***

### *பிப்ரவரி மாதம் ஜெபக்கூடுகைகள் நடைபெறும் விபரங்கள்*

| தேதி | நாள் | நேரம் | இடம் / தொடர்பு |
|---|---|---|---|
| 03.02.2012 | முதல் வெள்ளி | மாலை 6 மணி | **சகோ. பாஸ்கர்,** ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடி – 2. செல் : 99940–25696 |
| 04.02.2012 | முதல் சனி | காலை 9.30 மணி | **Sharing Love Mission** தலைமை அலுவலகம், 5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9345675468 |
| 09.02.2012 | 2ம் வியாழன் | மாலை 7 மணி | **சகோதரி. பாத்திமா மேரி,** M.G.R. நகர் (பாலம்) திருச்செந்தூர் ரோடு, தூத்துக்குடி – 8. |
| 18.02.2012 | மூன்றாம் சனி | மாலை 6 மணி | **சகோ. ஜெயக்குமார்,** 2/328, 5 வது தெரு (Extn.) P&T காலனி, தூத்துக்குடி – 8. செல் : 9843379994 |

**என்னை இழுத்துக்கொள்ளும், உமக்குப் பின்னே ஓடிவருவோம்.** உன்னதப்பாட்டு 1:4

# பீல் ஆதிவாசி மாணவர்

## பராமரிப்புத் திட்டம்



மாணவியின் பெயர் : **அனிதா**

தந்தையின் பெயர் : ரமேஷ் மச்சானியா

தாயார் பெயர் : காபாய் மச்சானியா

பிறந்த நாள் : 22.12.2000

படிக்கும் வகுப்பு : 3rd Std.,

சொந்த ஊர் : ஹசல்வட்

மாவட்டம் : தார்

மாநிலம் : மத்தியப்பிரதேசம்

### மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–

அனிதாவின் தந்தை சாமுவேல் பார்கி இயேசு கிறிஸ்துவை அறியாத ஒரு பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் மிகவும் அந்தகாரத்திலும் பிசாசின் பிடியிலும், அனைத்துவிதமா பாவங்களின் பிடியிலும் சிக்கித் தவித்து வந்தார். இவரது முழு குடும்பமும் அசுத்த ஆவிகளை வணங்கி வந்தது. இவர்கள் உள்ளடங்கிய கிராமத்தில் வாழ்ந்து வந்ததால் சுவிஷேம் அறிவிக்கவும் இவர்களை இரட்சிக்கவும் இங்கு யாருமில்லை.

ஒரு நாள் ஒரு விசுவாசியின் மூலம் இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு இவர் விசுவாசிக்க ஆரம்பித்தார். அதன்பின் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். தேவன் அவரது கட்டுகளில் இருந்து அவரை விடுதலையாக்கினார். அதன்பின் தன்னை அர்ப்பணித்து ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவியைக் குறித்து :–** அனிதா நன்றாக படிப்பாள்.

**ஜெபியுங்கள்:–** இவளுடைய படிப்பிற்காக தேவன் நல்ல ஞானத்தைக் கொடுக்கும்படியாகவும், பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

**மாணவியைத் தாங்குபவர் :–** **Mr. Walter Vasanth - Chennai.**

நீங்களும் மாதம் ரூ. 500/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். இன்னும் 330 குழந்தைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை. உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்துங்கள்.

# காணிக்கை அனுப்பும் வழிகள்

⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.

⇨ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.

⇨ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.

⇨ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.

⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் **Bank Of Baroda** வங்கி மூலம் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்பலாம். FCRA A/c. No.07080100002672 - Sharing Love Mission. IFS Code : BARB0TUTICO

---

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால்**
**அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009
(I F S Code : TMBL0000106)

---

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373
(IFS Code : UTIB0000105)

---

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799
(IFS Code : ICIC0006139)

---

ஆதரவாளர்கள் எங்களது வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும் போது, உங்களது பெயரை கண்டிப்பாக கம்யூட்டரில் பதிவு செய்யும்படி ஒவ்வொரு முறையும் வங்கி அலுவலகரிடம் கூறி அதை உறுதி செய்து கொள்ளவும், இல்லையெனில் நீங்கள் செலுத்தும் காணிக்கை யார் செலுத்தியது என்ற விபரம் எங்களுக்கும் தெரியாமல் போக வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் கடந்த மாதம் கடலூர் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் அருகே கரையைக் கடந்த தானே புயலில் சிக்கி அநேகர் உயிரிழந்தனர். ஏராளமான பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது. மணிக்கு நூற்று நாற்பது கிலோ மீட்டர் வேகத்துடனான சூறைக்காற்றுடனும் மிகக் கடுமையான அடைமழையுடனும் தானே புயல் கரையைக் கடந்துள்ளது. கட்டிடங்கள், மரங்கள், மின் விநியோகக் கட்டமைப்பு என பலவற்றிலுமாக ஏராளமான பொருட்சேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

---

மனித ரோமத்தைவிட பத்தாயிரம் மடங்கு மெலிதான மின் கம்பிகளை உருவாக்குவதில் ஆஸ்திரேலியாவின் கணினி விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர். இவ்வகை கம்பிகள் சிலிகான் அணுக்களுடன் பாஸ்பரஸ் அணுக்களைக் கலந்து இந்த நுண்கம்பி உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யும்போது, கம்பியின் மின் கடத்தும் மையப்பகுதி பாதுகாக்கப்படுகிறது. அதே நேரம் கடத்தப்படும் மின்சாரமும் அதிகம் விரயமாவதில்லை. குவாண்டம் கணினிகள் என்று சொல்லப்படுகின்ற அதிவேகத் திறன் கொண்ட அடுத்தத் தலைமுறை கணினிகளை உருவாக்கவதற்கு இந்த நுண்கம்பிகள் மிக அவசியமாகத் தேவைப்படும்.

---

இத்தாலி நாட்டின் கடல் பகுதியில் உள்ள துஸ்கான் தீவு அருகில் சென்று கொண்டிருந்த கோஸ்டோ கான்கார்டியா என்ற பிரமாண்ட சொகுசுக் கப்பல் பாறையில் மோதி கடலில் மூழ்கியது. இந்த கப்பலில் சிப்பந்திகள் உட்பட 4500–க்கும் மேற்பட்டவர்கள் இருந்தனர். கப்பல் தரை தட்டியதுமே மீட்புப் பணிகள் தொடங்கின. இந்தக் கப்பலில் பயணம் செய்த 202 இந்தியர்கள் மீட்கப்பட்டனர்.

நன்றி : www.bbc.co.uk


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# கிராம ஆலயம் குந்திகேடா குஜராத்



குஜராத் மாநிலத்தில் தாகோத் மாவட்டம் தாகோத் தாலுகாவில் குந்திகேடா கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமத்து ஜனங்கள் அதிகமாய் சாராயம் குடிப்பதிலும், திருடுவதிலும், ஒருவருக்கொருவர் சண்டையிடுவதிலும் ஈடுபட்டுக் கொண்டும், அசுத்த ஆவிகளை வணங்கியும், ஒருவருக்கு ஒருவர் விரோதமாய் பில்லிசூனியம் செய்தும் வருபவர்கள்.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு பார்சிங்பாய் மாவி என்பவர் குடும்பம் முழுவதும் நோய்களிலும், பிசாசின் கட்டுகளிலும், தாங்களே செய்த பில்லிசூனிய கட்டுகளிலும் சிக்கி வாழ்ந்து கொண்டிருந்தார்கள். குறிப்பாக இவரது மகன் ரஷியா பாய் புத்தி சுயாதீனமற்றவராய், பிசாசின் பிடியில் சிக்குண்டு அலைந்து திரிந்தார். இந்நிலையில் அருகிலுள்ள ஹிமாலா கிராமத்தைச் சேர்ந்த ஷாலோம் சபை மூப்பர் ரசூல்பாய் அவர்கள் ரஷியா பாயை கண்டு தனது கிராம ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு ஷாலோம் சபையின் ஊழியர் சாம்ஜி பாய் இவருக்காக பாரத்தோடு ஜெபித்தார். உடனடியாகவே ரஷியாபாய்க்கு ஆவி, ஆத்துமா, சரீரத்தில் ஒரு பரிபூரண விடுதலையை தேவன் கொடுத்தார்.

தேவன் கொடுத்த பரிபூரண விடுதலையைக் கண்ட ரஷியாபாயின் குடும்பத்தில் இப்படி பிசாசின் பிடியினாலும், நோயினாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அனைவரும் ஹிமாலா கிராமத்திற்கு சென்று ஊழியரிடம் ஜெபித்து அவர்களும் பூரண விடுதலையை பெற்றுக் கொண்டதோடு தேவனை தங்களது சொந்த இரட்சகராகவும் ஏற்று கொண்டனர்.

ரஷியாபாயின் சகோதரர் விசியாபாய் அவர்கள் தேவனை ஆராதிப்பதற்காக தன்னுடைய வீட்டிலேயே செவ்வாய் கிழமை தோறும் கூட்டங்களை ஏற்பாடு செய்தார். இதில் ஹிமாலா கிராம ஷாலோம் சபை ஊழியர் சாம்ஜி பாய் அவர்கள் கூட்டங்களை நடத்தினார். அதன்பின் விசியா பாய் தேவனிடமிருந்து ஊழிய அழைப்பைப் பெற்று ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியப் பயிற்சி பெற்று ஊழியம் செய்துவருகிறார். இதுவரை அக்கிராமத்தில் 60 குடும்பங்கள் தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். மேலும் சகோ. விசியா பாய் தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாகக் கொடுத்தார். அதில் சுமார் 2 லட்சம் செலவில் அழகான ஷாலோம் கிராம ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது.

இந்த ஆலயம் கட்டுவதற்கென்று **Madras Christian College Hr. Sec. School ஆசிரியர்கள்** ரூ.1 இலட்சம் காணிக்கை கொடுத்துள்ளார்கள். 14.01.2012 அன்று Madras Christian College Hr. Sec. School தலைமை ஆசிரியர் திரு. மனோகரன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதனை நடைபெற்று வருகிறது. தேவனுக்கே மகிமை!

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2012ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2012-2014.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

## நாலுமாவடி இயேசு விடுவிக்கிறார் புத்தாண்டு ஆசீர்வாத கூட்டத்தில் நமது பேராயர் வே. தேவதாஸ் அவர்கள்





01.01.2012 அன்று நாலுமாவடி, தேவனுடைய கூடாரத்தில் நடைபெற்ற புத்தாண்டு ஆசீர்வாத கூட்டத்தில் ஷாலோம் பிஷப் வே. தேவதாஸ் அவர்கள் பங்குபெறவும், சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களுக்காகவும், இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் அனைத்துத் துறைகளுக்காகவும் ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார். நமது ஷாலோம் ஊழியங்களை நேசித்து ஜெபித்து, தாங்கி வரும் இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காகவும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## ஷாலோம் - இயேசு விடுவிக்கிறார் - 10 இலட்ச ஆத்துமாக்கள் அறுவடைத் திட்டம் சுகமளிக்கும் கூட்டங்களில் நடைபெற்ற அற்புத சாட்சிகளில் ஒன்று....



பெயர் : **பாங்க்லி பேன் குர்பான்**

கிராமம் : பேஹ், குஜராத் வயது : 60

நான் கடந்த 15 ஆண்டுகளாக வயிற்றில் இருந்த கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். மந்திரவாதிகளிடம் சென்றும், மருத்துவம் பார்த்தும் குணமாகவில்லை. இந்நிலையில் 02.12.2011 அன்று பாட்டன்புரா கிராமத்திலுள்ள ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அங்கு போதகர் ரன்சிங் பாபோர் அவர்கள் தேவ செய்தியளித்து, வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கும் போது, தேவன் எனது கட்டியை மறையச் செய்து அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார் கிடைத்தது தேவனுக்கே மகிமை!

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss